Registered as a Newspaper பக்கங்கள் 8 விலை ரூபா 6-00

பொதுசன நூலகம், யாழ்ப்பாணம்.

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆவணி 10 | 26-08-94 | வெள்ளிக்கிழமை | ஓசை 189

## விஷமிகள் வைத்த தீயினால் பாடசாலை எரிந்து நாசம்

வடமராட்சி கிழக்கு ஆழியவளை சீ.சீ.த.க. பாடசாலை விஷமிகள் சிலர் வைத்த தீயினால் தளபாடங்களுடன் எரிந்து சாம்பலானது. விஷமிகளின் இந்த நடவடிக்கையினால் பாடசாலைக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகல் நிகழ்ந்தது. வெற்றிலைக்கேணி இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்து செம்பியன் பற்றில் இயங்கி வந்த 575 மாணவர்கள் கல்விபயிலும் இப்பாடசாலை முற்றாக தளபாடங்களுடன்எரிந்து சாம்பலானது. (8ஆம் பக்கம் பார்க்க)

# ஊழல் புரிந்த அரசியல்வாதிகள் சொத்துக்கள் பறிமுதலாகும்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

ஊழல் அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றில் கடந்த ஆட்சிக்காலத்தில் குற்றமிழைத்தவர்களின் அசையும் அசையா சொத்துக்கள் தேசிய மயமாக்கப்படும் எனவும் எவருக்கும் தயவு காண்பிக்கப்படமாட்டாது எனவும் வெளிநாட்டு வர்த்தக, நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இத்தகையோரின் சொத்துக்கள் வெளிநாட்டில் சுவிஸ் வங்கியில் இருந்தால் கூட மீளப் பெறப்படும். இவ் விவகாரத்தை பிலிப்பைன்ஸ் ஜனாதிபதிமார்க்கோசுக்குநடந்ததைபோல்நடத்தவே தான் தீர்மானித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இது குறித்து அமைக்கப்படவுள்ள ஆணைக்குழு விரைவில் இயங்கும் என தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு ஆண்டுகால ஆட்சியில் நடைபெற்ற ஊழல், அதிகார துஷ்பிரயோகம் குறித்து (8-ம் பக்கம் பார்க்க)

## அக்காவை வாழ்த்தி தம்பி கை குலுக்கினார்

(கொழும்பு)

தம்பி அக்காவுக்கு கைகுலுக்கி வாழ்த்து தெரிவிக்க தாயார் இருவரின் கைகளையும் பிடித்திருந்த காட்சி பாராளுமன்றத்தில் ஓர் வரலாற்று சம்பவம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று பாராளுமன்றம் கலைந்து உறுப்பினர்கள் வெளியேறிக் கொண்டு இருக்கையில் எதிர்க்கட்சி வரிசையில் இருந்த அனுரா பண்டாரநாயக்கா ஆளும் கட்சியில் பிரதமராக பதவிவகிக்கும் தனதுசகோதரியானசந்திரிகா குமாரணதுங்காவுக்கு கை குலுக்கி வாழ்த்து தெரிவித்தார்- அப்போது இவர்களின் தாயார் சிறிமாவோபண்டாரநாயக்கா தனது ஆசனத்தில் இருந்து எழுந்து வந்து இருவரின் கைகளையும் ஒன்றா... (8-ம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோர், படுகொலையானோர் விபரங்கள் பற்றி ஆராய ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படும்

காணாமல் போனவர்கள், படுகொலையானவர்கள் மனித உரிமைமீறல்கள் என்பன குறித்து ஆராய்வதற்கு தனித்தனியாகமூன்று ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படவுள்ளதாக சிறிலங்காவின் புதிய நீதி அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை, மட்டக்களப்பு, எம்பிலிப்பிட்டிய படுகொலை அடங்கலாக தென் மாகாணம், வடக்கு-கிழக்கு, வடமேற்கு, ஊவா மாகாணங்கள் உட்பட்டதாக இவ் ஆணைக்குழுவின் விசாரணை அமையும். ஓய்வு பெற்ற நீதிபதிகள் இவ் ஆணைக்குழுவிற்கு தலைமை தாங்குவர் என்றும் பேராசிரியர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

## சிற்றூர்தி சேவை நாளை இல்லை

முதற்பெண் கடற்கரும்புலியை நினைவுகூரும் நாளை முன்னிட்டு நாளை சனிக்கிழமை சிற்றூர்தி சேவைகள் நடைபெறமாட்டாது என யாழ் மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையம் அறிவித்துள்ளது.

## வகுப்புகள் நிறுத்தம்

காங்கேசன்துறை துறைமுக கப்பல்கள் தகர்ப்பு எழுச்சி நாளை ஒட்டி நாளை சனிக்கிழமை அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களும் வகுப்புகளை நிறுத்தி அன்றைய நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அனைத்து உறுப்பினர்களையும் தனியார் கல்வி நிலைய ஒன்றியம் கேட்டுள்ளது.

## பயணிகளிடம் வழிப்பறி செய்த இருவருக்கு மரணதண்டனை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - எழுதுமட்டுவாள் பிரதான வீதியில் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்ட இருவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

இம் மாதம் எட்டாம் திகதி அன்று அதிகாலை 1. 30மணியளவில் கிளாலி - எழுதுமட்டுவாள் வீதியில் வைத்து ஆட்டோவை வழிமறித்து பணமும் உடைமைகளும் கொள்ளையடிக்கப்பட்டது தெரிந்ததே.

இக்கொள்ளையில் ஈடுபட்ட இருவரும் சம்பவம் நடைபெற்றஇரண்டாவது நாளே தமிழீழ காவல் துறையினரால் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணமும் உடைமைகளும் மீட்கப்பட்டு உரிமையாளரிடம் காவல் துறையினரால் ஒப்படைக்கப்பட்டது.

இக் கொள்ளையில் ஈடுபட்ட இருவருக்கும் நேற்று காலை 10. 30 மணியளவில் எழுதுமட்டுவாள் சந்தியில் வைத்து மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

## பெண்ணை தாக்கிவிட்டு நகைகள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி எழுதுமட்டுவாள் பகுதியில் உள்ள வீடொன்றில் புகுந்த கொள்ளையர் அங்கு நித்திரையில் ஆழ்ந்திருந்த பெண்ணைத் தாக்கிவிட்டு அவர் அணிந்திருந்த தங்க நகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இச் சம்பவத்தில் திருஞானசம்பந்தர் நவமலர் (34 வயது) என்னும் (8-ம் பக்கம் பார்க்க)

## கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் வீரசாதனை எமது போராட்டத்தின் ஒரு திருப்புமுனை

விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு அறிவிப்பு

தனித்தனியாகமூன்று ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படவுள்ளதாக சிறிலங்காவின் புதிய கொலை அடங்கலாக தென் மாகாணம், வடக்கு-கிழக்கு, வடமேற்கு, ஊவா மாகாணங் விற்கு தலைமை தாங்குவார் என்றும் பேராசிரியர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

# எவ்வேளையிலும் கடமையை செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும்

## பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்து

(கொழும்பு)

அவசியம் ஏற்படும் பட்சத்தில் எந்த வேளைகளிலும் கடமையை நிறைவேற்ற பாதுகாப்பு அமைப்புக்களை சேர்ந்த தலைவர்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும் என பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் மகாநாடொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். பாதுகாப்பு விடயங்களில், முன்னைய அரசாங்கத்தின் கொள்கைகளை இந்த அரசாங்கமும் பின்பற்றுமா எனக் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், அமுலாக்கல் நடவடிக்கைகளில் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகள் வித்தியாசமாக இருக்கும் என்று கூறினார்.

# புதிய சபாநாயகராக கே. பி. ரட்ணாயக்கா

(கொழும்பு)

சிறிலங்காவின் பத்தாவது பாராளுமன்றத்தின் சபாநாயகராக பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த திரு. கே. பி ரட்ணாயக்கா 34 அதிகப்படியான வாக்குகளால் நேற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார். திரு. அனில் முனசிங்கா பிரதி சபாநாயகராக 33 அதிகப்படியான வாக்குகளால் தெரிவாகியுள்ளார்.

புதிய பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் நேற்றுக்காலை ஆரம்பமாகிய போது பிரதமமந்திரி திருமதி சந்திரிகா குமாரணதுங்க சபாநாயகரின் பதவிக்கு திரு. கே. பி. ரட்ணாயக்காவின் பெயரை முன்மொழிந்தார். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் திரு அஷ்ரப் அதனை வழிமொழிந்தார்.

ஐ. தே. கட்சியின் சார்பில் திரு. அனுரா பண்டாரநாயக்காவின் பெயரை திரு.விஜய பாலமென்டிஸ் முன்மொழிந்தார். திரு. எஸ். தொண்டமான் அதனை வழிமொழிந்தார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. எதிர்நோக்கும் சவாலை எதிர்கொள்வேன்

-காமினி தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில்ஐ தே க எதிர்நோக்கும் சவால்களையும் தடைகளையும்மிகவும்சாதுரியமானமுறையில்முகம்கொடுக்க தான் தயாராக இருப்பதாக காமினி திசாநாயக்கா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவராகவும் கட்சியின் பிரதித் தலைவராகவும் போட்டிமூலம் தெரிந்தெடுக்கப்பட்ட பின்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இக் கருத்தை தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் இதற்கான ஆற்றல் அனுபவம், திறமை தன்னிடம் இருப்பதாகவும் இதனை பெரும்பாலான உறுப்பினர்கள் உணர்ந்து இருப்பதாலேயே தன்னை இப்பதவிக்கு தெரிவு செய்ததாகவும் அவர்

(8-ம் பக்கம் பார்க்க)

## விஜேதுங்கா இல்லை

(கொழும்பு)

ஜனாதிபதியால் பாராளுமன்றம் ஆரம்பித்து வைக்கப்படும் சம்பிரதாய சம்பவங்கள் எதுவும் நேற்று இடம் பெறவில்லை.

பாராளுமன்ற அங்குரார்ப்பண வைபவங்களில் டி. பி. விஜேதுங்கா கலந்துகொள்ள மாட்டார் என முன்னரே அறிவிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே-

## விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

''எமது மகளிர் படையணியினரின் ஒரு சகாப்த வளர்ச்சியானது புதிய பரிமாணங்களில் முன்னேற்றங்கண்டு வருகின்றது. இந்த வகையில் கடற் கரும்புலியான கப்டன் அங்கயற்கண்ணியின் வீரசாதனை எமது போராட்டப் பாதையில் ஒரு புதிய திருப்புமுனையைக் குறித்து நிற்கிறது. காலம் காலமாக அடிமை இருளில் கட்டுண்டு கிடந்து மெல்ல மெல்ல முன்னேற்றப் பாதையில் சென்றுகொண்டிருக்கும் தமிழீழப் பெண்ணினத்திற்கு இந்த வீர சாதனை நம்பிக்கை யூட்டும் நிகழ்வாக அமைகிறது''

இவ்வாறு முதற் பெண் கடற் கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணிக்கு வீர அஞ்சலி செலுத்தி விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையின் மூழுவிபரமும் வருமாறு.

எமது விடுதலைப் போராட்டம் ஒப்பற்ற வீரவரலாறுகளைப் படைத்துக் கொண்டிருக்கின்றது விடுதலைக்கான எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்தில் இருந்தே பிறக்கின்றது. எண்ணற்ற தியாகங்களும்அர்ப்பணிப்புக்களும்நிறைந்தஎமதுவிடுதலைப் போராட்டத்தில் ஒரு புதிய அத்தியாயமாக கரும்புலிகள் விளங்குகின்றார்கள். எதிரியின் வலிமை மிக்க படைப் பலத்தை மனபலத்தால்உடைத்தெறியும் ஒப்பற்ற தியாகிகளாக சரும்புலிகள் இருக்கின்

(8-ம் பக்கம் பார்க்க)

## ஷெல்வீச்சில் காயமடைந்த சிறுமி நேற்று மரணம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த 13-ம் திகதி மல்லாகம் மக்கள் குடியிருப்புகள்மீது மேற்கொண்ட எறிகணை வீச்சுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த முத்துக்குமாரு சகிலா (வயது 10) என்னும் சிறுமி நேற்று மரணமானார்.

குடாநாட்டின் பல பகுதிகள்மீது அன்றையதினம் இராணுவத்தினர் எறிகணை தாக்குதலை மேற்கொண்ட வேளை மல்லாகம் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணைக்கு இவரும் இவரது தாயாரும் படுகாயமடைந்து யாழ்போதனாமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## தெல்லிப்பளையில்கைதான குடும்பஸ்தர் விடுவிப்பு

தெல்லிப்பளை பகுதியில் வீடு பார்க்க சென்ற போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட எஸ். கருணேந்திரன் என்னும் குடும்பஸ்தர் பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவர் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய கொடியேற்ற தினத்தன்று தெல்லிப்பளை பகுதியில் உள்ள தனது வீட்டை பார்க்க சென்ற போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இவர் இராணுவத்தினரால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார். இதனால் இவர் தற்போது மனநிலை பாதிப்படைந்த நிலைக்கு ஆளாகியுள்ளார் என தெரியவருகின்றது.

பலாலி இராணுவ முகாமிலிருந்து விடுவிக்கப்பட்ட இவரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையினர் பொறுப்பேற்று குடும்பத்தினரிடம் ஒப்படைத்தனர். (சி)

## ஜனாதிபதி ஆட்சிமுறை மாற்றத்திற்கு சட்டமூலம் வரின் ஆதரிப்போம்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் சட்டமூலம் எதுவும் கொண்டு வருமாயின், அது கொண்டு வரும் சட்ட மூலத்தைப் பொறுத்து ஆதரவு அளிப்பது குறித்து முடிவெடுக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்கா தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், தனக்கும் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் கருத்து வேற்றுமை எதுவும் கிடையாது எனவும் இருவரும் கட்சிக் கட்டுப்பாட்டிற்குள் வளர்ந்தவர்கள்எனவும் மேலும்அவர் தெரிவித்தார்.

## புலிகளின் தாக்குதலுக்கு இருபடையினர் காயம்

வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் இராணுவக் காவலரண்களை நேற்று முன்தினம் அதிகாலை விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியதில் இரு இராணுவத்தினர் காயமடைந்ததாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காயமடைந்த படையினர் அனுராதபுரம் வைத்திய சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

## தனது முகத்தில் தானே கரி பூசிக்கொண்ட டி. பி.

(கொழும்பு)

இலங்கையின் வரலாற்றில் முதல் முறையாக நாட்டின் தலைவர் என்ற முறையில் ஜனாதிபதி அவர்கள் புதிய நாடாளுமன்றத்தைத் தொடக்கிவைத்து ஆற்ற வேண்டிய சம்பிரதாயபூர்வ உரையை இம்முறை ஆற்றவில்லை-

தனது கட்சி எதிர்க்கும் கொள்கை அறிவிப்பு உரையை அரசின் சார்பில்தான் ஆற்றவேண்டும் என்ற நிலையைத் தவிர்க்கவே ஜனாதிபதி தொடக்க நாள் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதைத் தவிர்த்

(8ஆம் பக்கம் பார்க்க)

விசேட
மாணவர் அரங்கு
A/L மாணவர்களுக்கான அளவையியல் பரீட்சை வழிகாட்டி நாளை வெளிவரும்.

## வரி விளம்பரம்

**வெளிவந்து விட்டது!**

ஆண்டு11ற்கானசைவநெறி துரித மீட்டல் வினாவிடை வெளிவந்து விட்டது. ஆக்கம்: க. சந்திரசேகரம் ஏக விநியோகஸ்தர்கள்: ஸ்ரீ சுப்பிரமணியம் பொத்தகசாலை 235, காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம் (9176)

**வீடு விற்பனைக்கு**

262, கச்சாய்வீதி சாவகச்சேரியில் 5 பரப்பு காணி சகல வசதிகளுடனான வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செ. மகேந்திரம் 262 கச்சாய், வீதி. சாவகச்சேரி. (9196)

**இரும்புத் தகடு, தண்ணீர்த் தாங்கி**

பின்வருவன விற்பனைக்குள்ளன 1) 8×4 சதுர அடி ஒன்றரை நூல் தடிமன் இரும்புத்தகடு. 2) 4×4×4கனஅடி சதுர தாங்கி. 3) 12 அடிநீள உருளை வடிவ தண்ணீர்த் தாங்கிகள். தொடர்பு- 'மில்க்வைற்' (சி-10166)

**ஆனந்தம சியாக்காய்**

சிரசின் தனித்துவத்தைப் பேணுவதற்கு கைதடி சுதேச வைத்திய சங்கத் தலைவர் சிபார்சுப்படி மூலிகைகளுடன் சியாக்காய் சேர்த்து தயாரிக்கப் பெற்றது ஆனந்தம் சியாக்காய் பவுடர், கேட்டு வாங்கிப் பயன் பெறவும். (8969)

**ஜெயா அழகு யாடம்**

விற்பனை அகமும் காட்சி அகமும் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திற்கு வடக்கு வீதியில் அமைந்துள்ளது என்பதை வாடிக்கையாளர்சட்கு அறியத் தருகிறோம். [சி- 101 (!)

---

## அண்ணா கோப்பி காட்சியகத்தில்

நல்லூரில் அமைந்திருக்கும் தொழிற்துறை மேம்பாட்டு கைத்தொழில் சந்தைக் காட்சியகத்தில் உள்ள அண்ணா கோப்பி காட்சிச்சாலையில் எமது உற்பத்திப்பொருள்களான

★ அண்ணா கோப்பி ★ ஊதுபத்திகள்
★ பற்பொடி மற்றும் இலகு தோசை மா
★ இலகு இட்டலி மா ★ ஜீவாகாரம்
★ டொபி வகைகளை

மலிவு விலையில் பெற்றுக் கொள்வதுடன் ஒரு அழகிய முருகன் திருவுருவப்படத்தையும் இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**அண்ணா தொழிலகம்**
**இணுவில்.**

(சி-10176)

---

உ

**தென்மட்டுவில் - வேரற்கேணி**
**திருவருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமிதிருக்கோவில்**
**கும்பாபிஷேக தின ஸ்கந்த ஹோம**
**மஹா சங்காபிஷேக விஞ்ஞாபனம்**

26 - 08 - 1994 வெள்ளிக்கிழமை காலை 7மணி முதல் யாக பூஜை, ஸ்கந்த விஷேட திரவிய ஹோமம், அக்கினி உபசாரம், சங்காபிஷேகம், பூஜை
பகல் மகேஸ்வர பூஜை [அன்னதானம்]
மாலை 5மணிக்கு பூஜை, ஷண்முகார்ச்சனை, உற்சவம்
பிரதமகுரு: சிவாகம கிரியா தத்துவநிதி
சிவ ஸ்ரீ. ச. சோமாஸ்கந்தக் குருக்கள்
மங்களஇசை திரு. பழனிமலை திரு. ப பஞ்சமூர்த்தி
திரு. ப. பாலநந்தீஸ்வரன் குழுவினர்

உபயம்
பாலா ஸ்டோர்ஸ், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

மக்கள் அனுசரணையுடன்
இந்து இளைஞர் சங்கம்

(9204)

---

## காதால்கேட்டறிய முடியாதவற்றை கண்களால் படித்தறியலாம்!

**வானொசை**

**உங்களுக்கு வழிசமைத்து தருகிறது**

இன்றைய சூழ்நிலையில் வானொலி கேட்கும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அப்படிக் கிடைத்தாலும் சர்வ தச ஒலிபரப்பு நிலையங்களிலிருந்து ஒலிபரப்பப்படும் அனைத்து விடயங்களையும் அறிய நேரமில்லை.

**கவலையை விடுங்கள்**

**வானொசை**

**இதழை வாங்கிப் படியுங்கள்!**

உலகின் பல்வேறு திசைகளிலுமிருந்தும் ஒலிக்கின்ற வானொலித் தகவல்களைத் தாங்கி வருகின்ற ஒரேயொரு இதழ்

**வானொசை**

சகல புத்தகசாலைகளிலும்
உங்கள் வானொசையைப்
பெற்றுக் கொள்ளலாம் (9207)

---

**JAFFNA COLLEGE**
**INSTITUTE OF TECHNOLOGY**

## நேர்முகப் பரீட்சை

94/95 கல்வி ஆண்டிற்கு விண்ணப்பித்தோருக்கான நேர்முகப் பரீட்சை புதன்கிழமை (31-08-94) காலை 9.00 மணிக்கு வட்டுக்கோட்டையில் எமது நிறுவன வளாகத்தில் நடைபெறும்.

இதற்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. விண்ணப்பித்த யாவரும் கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் ஆகியவற்றுடன் சமுகம் தரவும்,

முக்கிய குறிப்பு: விண்ணப்பிக்கத் தவறியவர்கள் 31-08 94 நேரடியாகத் தொடர்பு கொள்ள ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(சி-10179) இயக்குநர்

---

## விற்பனை முகவர்கள் தேவை

மாதாந்த இதழ்களை வெளியிடும் பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்கு நடமாடும் விற்பனை முகவர்கள் தேவை யாழ். மாவட்டத்தின் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலிருந்தும் இதற்கான விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. 19 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட பெண்கள், ஆண்கள் ஆகிய இருபாலரும் விண்ணப்பிக்கலாம். மேலதிக விபரங்கள் நேரில்.

விண்ணப்ப முடிவுத் திகதி:- **1994 09-05**

---

## நினைவு கூருகின்றோம்...

**26. 08. 1994 .**

1985-ம் ஆண்டு இதே தினத்தில் பயிற்சி முகாமில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப் பிரிந்த,

★ **மரைக்கார்** (கு. தர்மராசா-பேசாலை-மன்னார்)

1987-ம் ஆண்டு மன்னார் - நானாட்டான் பகுதியில் தேசவிரோதசக்திகளினால் கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த,

**கில்மன்** (செல்வநாயகம் செல்வகுமார்-பாலைக்குழி--மன்னார்)

**ரஞ்சன்** (இம்மானுவேல் ரஞ்சன்-பிச்சைக்குளம், முருங்கன்-மன்னார்)

**அருச்சுனா** (ஆசிர்வாதம் சகாயம்-நானாட்டான்-மன்னார்)

1989-ம் ஆண்டு இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**நிக்கலஸ்** (— சிறிகுகக்-மட்டு)

★ **ஆனந்தன்** (- - வீரமுனை, சம்மாந்துறை-அம்பாறை)

★ **ரவி** (— பிரகாஷ் —)

★ **பாக்கியராஜா** (கந்தையா மைக்கல்ராஜ் -)

அம்பாறை-அக்கரைப்பற்றுப் பகுதியில் தேசவிரோதசக்திகளினால் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட

★ **சாலிக்குட்டி** (— — அக்கரைப்பற்று-அம்பாறை)

திருமலையில் தேசவிரோதசக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

★ **பிரபா** (தியாகராசன் செல்வகுமார்-திருமலை)

★ **சங்கர்** (அரசுநாயகம் சைமன்-திருமலை)

★ **ரசிட்** (— — திருமலை)

தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

★ **ஜீவா** (அன்ரன் பெனடிக்ற் குணசிங்கம்-மீனாட்சியம்மன் கோயிலடி-சாவகச்சேரி)

தேசவிரோதிகளால் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**பொன்னுத்துரை முருகமூர்த்தி** (ராசா) சங்கத்தார்வயல்-இயக்கச்சி)

1990-ம் ஆண்டு மண்டைதீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய,

**முத்துராமன்** (தவராசா இராமகிருஷ்ணன்-ஆதிகோவிலடி-வல்வெட்டித்துறை)

**ஜக்சன்** (பூபாலசிங்கம் சசிதரன் - புகையிரதநிலைய வீதி-பளை)

முல்லைத்தீவில் தரையிறங்கமுற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**தங்கத்துரை** (கந்தசாமி செல்வராசா - வங்காலை-மன்னார்)

**வித்தி** (— விஜயகுமார் - கிராஞ்சி-பூநகரி)

**முகுந்தன்** (குணசேகரம் யோகராசா-5 ம் வட்டாரம்-நெடுந்தீவு)

**அருளப்பு** (சுப்பிரமணியம் ஜெயரட்ணம்-கரணவாய் கிழக்கு, கரவெட்டி-யாழ்)

**ரஜனி** (— — —)





**SENSEI** சதாசிவம் தர்மராசா (2-ம் கறுப்புப் பட்டி)
*(CHIEF INSTRUCTOR AND EXAMINER)*

யாழ். நகரில் இலங்கை அரசின் அங்கீகாரம் பெற்ற சர்வதேச சோட்டோகான் சான்றிதழ்கள் வழங்கும் ஒரே ஒரு கராட்டே நிறுவனம்.

வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள்

(1) **T.Y.M.H.A. திருநெல்வேலி சந்தி**
(தலைமையகம்) சனி ) காலை 6.00 - 8.00
ஞாயிறு ) மாலை 4.00 - 6.00

(2) யாழ். பல்கலைக்கழகம்
(மாணவர் மட்டும்) செவ் ) காலை 6.00 - 7.30
வெள்ளி)

(3) சாவகச்சேரி, மீசாலை.
புத்தூர்ச் சந்தி) சனி ) 4.00 - 6.00
ஞாயிறு )
விசாரணைகள் சண்ரவி,
சைக்கிள் அண்ட் ரயர் வேர்க்ஸ்,
மீசாலை வடக்கு, மீசாலை.

(4) புத்தூர்ச் சந்தி,
பருத்தித்துறை வீதி, சனி ) 4.00 - 6.00
ஞாயிறு )
விசாரணைகள் லிங்கம் சிக்ஸ் கவுஸ்
புத்தூர்ச் சந்தி. புத்தூர்.

**SHOTOKAN KARATE INTERNATIONAL FEDERATION (NORTH SHRI LANKA)**
**AFFILIATED TO CEYLON KARATE ASSOCIATION**

(9201)

தேவை யாழ். மாவட்டத்தின் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலிருந்தும் இதற்கான விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. 19 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட பெண்கள், ஆண்கள் ஆகிய இருபாலரும் விண்ணப்பிக்கலாம். மேலதிக விபரங்கள் நேரில்.

விண்ணப்ப முடிவுத் திகதி:- **1994 09-05**

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:-
**விளம்பர இல.348**
மே | பா ஈழநாதம் பணிமனை
மகேந்திரா வீதி;
யாழ்ப்பாணம்.

(சி-10177)

# 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கணபதி தியாகேசு

[காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபன மின்பகுதி உயர் உத்தியோகத்தர்]

மலர்வு: 07-01-1931
உதிர்வு: 31-08-1988

அன்பாலும் அறிவாலும் பண்பாலும் வழிகாட்டிய என் அன்புத்தந்தையின் ஆத்மா சாந்தியடைய முருகனை வேண்டுகின்றோம்.

ஆதியாமலை,
இமையாணன்,
உடுப்பிட்டி

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

(9209)

**வித்தி** (— விஜயகுமார் - கிராஞ்சி-பூநகரி)

**முகுந்தன்** (குணசேகரம் யோகராசா-5 ம் வட்டாரம்-நெடுந்தீவு)

**அருளப்பு** (சுப்பிரமணியம் ஜெயரட்ணம்-கரணவாய் கிழக்கு, கரவெட்டி-யாழ்)

**ரஜனி** (— — —)

1992-ம் ஆண்டு யாழ். பண்டத்தரிப்பில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சேகர்** (தங்கராசா சிறிகாந்தராசா -சுப்பர்மடம் - பருத்தித்துறை )

1993-ம் ஆண்டு யாழ். கிளாலிக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரின் நீருந்து விசைப்படகு மீது கரும்புலித் தாக்குதல் நடத்திய போது வீரச்சாவெய்திய,

கடற்கரும்புலி,
**மேஜர் நிலவன் /வரதன்** (கந்தசாமி இராமச்சந்திரன் - கள்ளிச்சை, வடமுனை - மட்டு.)

கடற்கரும்புலி,
**கப்டன் மதன்** (சீனிவாசகம் சிவகுமார் - 143/11, எல்லை வீதி - மட்டு.)

யாழ். கிளாலிக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**கடற்புலி கப்டன் சிவா** (முத்துலிங்கம் கருணாநாதன் - குச்சவெளி - திருமலை)

**கடற்புலி லெப். பூபாலன்** (சுந்தர்ராஜ் பாஸ்கரன் - நாகர்கோவில் வடக்கு )

**கடற்புலி 2-ம் லெப். சுரேந்திரன்** ( சபாரெத்தினம் சிவாகரன் - திருமலை - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு )

இதே தினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் இலங்கை - இந்திய படையினராலும், தேசவிரோதிகளாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

★ இக் குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்கள்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி- 10175)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்,

# மேற்குலக படையெடுப்பினை நம்பியவர்கள் -இன்று தமது தலைவிதி தமது கையிலே என்பதை உணர்கின்றனர்

வழமைபோல தமது அடாவடித்தனமான போக்கில் செயற்பட்டு வரும் பொசுனியச் சேர்பியருக்கு அண்மையில் எதிர்பாராத அதிர்ச்சி ஏற்பட்டது. இம் மாதத்தின் முதல் வாரத்தில் சரயேவோவில் உள்ள உக்ரேனிய அமைதிப் பணி வீரர் சிலரால் பாதுகாக்கப்பட்டு வந்த ஐ. நா.வின் ஆயுதத்தளபாட மையமொன்றில் அதிகாலையில் நுழைந்த சேர்பியர் அங்கிருந்த T 55 ரக தாங்கியொன்றினையும் இரு கவச வாகனங்கள், விமான எதிர்ப்பு சுடுகலன் கருவியொன்றையும் எடுத்துச் சென்றனர். ஆனால் இம்முறை ஐ நா. வழமை போல வீணாக சேர்பியரை ஏன் பகைப்பான் என்றிருக்கவில்லை உடனடியாக ஐ. நாவின் ஆணையின்பேரில் நேட்டோவின் போர் விமானங்கள் தாக்குதலை தொடங்கின. முதலடியாக நகர்ந்து கொண்டிருந்த சேர்பியரின் விமான எதிர்ப்பு சுடுகலன் தொகுதியொன்று குண்டு வீசி அழிக்கப்பட்டது. மேலும் தாக்குதல்கள் திட்டமிடப்பட்டன. பலன் - அபகரித்தவை எல்லாவற்றையும் மறு நாளே சேர்பியர் ஐ. நா விடம் ஒப்படைத்தனர். இது பொசுனியச் சேர்பியரிடம் வழமையாக எதிர்பார்க்க முடியாத சங்கதி.


பொசுனியாவில் நிலைமைகள் எவ்விதம் மாறி வருகின்றன என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு. பொசுனியச் சிக்கல் 1992 - ம் ஆண்டு ஆரம்பித்த பின் இப்போது தான் அங்கிருந்து நம்பிக்கையூட்டும் செய்திகள் வெளிவருகின்றன. 'பரந்த சேர்பியா' என்கிற வெறியால் 'இனச் சுத்திகரிப்பு' என்கிற கொடிய செயலை மேற்கொண்ட பொசுனியச் சேர்பியர் இப்போது பல தரப்பாலும் ஏன் அவர்களை இவ்விதம் வளர்த்துவிட்டவர்கள் தரப்பிலிருந்தே கடும் எதிர்ப்பை எதிர் நோக்குகின்றனர். இது ஒரு புதிய திருப்பமாகும். சேர்பியரின் கொடுங்கோன்மைக்கு என்றாவது ஒருநாள் முடிவேற்பட்டே தீரும் என பொசுனிய குரோசியரும் முசுலிம்களும் இப்போது நம்பத் தொடங்குகின்றனர்.

அவர்கள் நம்பும் நிலையில் ''இனிமேல்தான் எமதுபோர் ஆரம்பிக்கப்படப்போவதாக' பொசுனிய முசுலிம்கள் கூறத் தொடங்குகின்றனர். அதுபோலவே இதுவரை காலமும் பொசுனிய சேர்பியரின் எல்லை மீறிய சகல அடாவடித்தனங்கட்கும் முழுமையான ஆதரவினை வழங்கி வந்த முன்னாள் யூகோசிலேவிய சேர்பியப் பகுதியின் சனாதிபதியான சிலோபடான் மிலோசவிச் 'பொசுனியச் சேர்பியரின் பைத்தியக்காரத்தனமான பேராசைகட்கு'' தான் தொடர்ந்தும் ஆதரவளிக்க முடியாது என இப்போது கூறத் தொடங்குகின்றார். அதுபோலவே இதுவரை ஆதரவளித்த மொன்றி நீக்ரோவின் தலைமையும் ''சேர்பியரின் மனித உரிமை மீறல்கள்'' எல்லையை கடந்து விட்டன என முதல் தடவையாக பகிரங்கமாக கண்டிக்கத் தொடங்கும் நிலை. இவை எல்லாவற்றையும் விட ''தமது பரந்த சிலாவிய இன நிலைப்பாடு காரணமாக பொசுனிய சேர்பியரின் கொடுமைகளை கண்டும் காணாமலிருந்த ருஷ்யத் தலைவர் போரிஸ் யெய்ட்சினே ''பொசுனியச் சேர்பியரின் போக்கு போதும் போதும் என்றாகிவிட்டது'' என்கிறார். (இதே ருஷ்யத் தரப்புத்தான் சேர்பியர் நிலைகளில் மீது நேட்டோ விமானங்கள் குண்டுவீச்சினால் 3-ம் உலகப்போர் ஆரம்பமாகும் என முன்னர் அச்சுறுத்தின.)

எனவே என்ன நடந்தது? இப்போது என்கிற கேள்வி எழுகின்றது இத்தகைய மாற்றங்கட்கு பிரதான காரணம் ''பொசுனியாவிற்கான இறுதி அமைதித் திட்டம்'' என நீண்ட விவாதங்களின் பின் முழுமையான அமெரிக்கப் பின்னணியில் ருஷ்ய மேற்குலக ஒன்றிய (European Union) நாடுகள் ஐ. நாவின் முகதாவில் தயாரித்த தீர்வினை ஏற்க பொசுனிய சேர்பியர் மறுத்தமையாகும். அதே சமயம் பொசுனியாவிற்கான சருவதேச ஆயுத தடையை விரைவில் நீக்குவது பற்றியும் இப்போது ஆராயப்படுவதால் முசுலிம்கள் குரோசியர் கை ஓங்க

யச் சேர்பியத் தலைவர்களோ இன்னமும் தமது வீண் பிடிவாதத்தினை தளர்த்துவதாகத் தெரியவில்லை. தம்மையொரு வரலாறு பழிவாங்கிய மக்கள் தொகுதியாக - 400 ஆண்டு காலத்திற்கும் மேலாக துருக்கிய ஓட்டோமன் சாமிராச்சியத்தின் பிடியில் சிக்கித் துவண்டது பற்றியும் பின் உலகப் போர்களின் போது ஜேர்மனிய இனத்தைச் சார்ந்த குரோசியர் ஜேர்மனியரோடு சேர்ந்து தமக்கு அழிவை ஏற்படுத்தியமை பற்றியும் அவர்கள் இன்னமும் மறக்க தயாராகவில்லை





**சேர்பியக் கொடுங்கோலர்கள்**

ஜெனரல் றட்கோ மிலாடிச் (பொசுனிய சேர்பிய தளபதி) — சிலோபடான் மிலோசவிச் (சேர்பிய சனாதிபதி) — றடோவான் கரஜிச் (பொசுனிய சேர்பியத் தலைவர்)

எனவே இப்போதும் முசுலிம்கள், றோமன் கத்தோலிக்கர் மேற்குலக வல்லாண்மை நாடுகள் தமது இருப்பை அழிக்க முற்படுகின்றன என்கிற ஒரு போலித் தோற்றத்தினை தமக்குள் உருவகப்படுத்திக் கொள்கின்றனர். எனவே ருமேனியாவிலிருந்து ஏட்ரியாட்டிக் கடல் வரை பரந்த பொசுனியா மசிடோனியா குரோசியா என பல முன்னைநாள் யூகோசிலேவியப்பகுதிகளில்வாழும் 20இலட்சம்சேர்பியரை அடக்கியபரந்த சேர்பியக் கனவினை இன்னமும் காண்கின்றனர். இதனாலே மிக அண்மையில் பொசுனிய சேர்பியத்தலைவரான றடோவான் கரஜிச் (Radovon Kar

னை எவ்வாறேனும் சேர்பியரை ஏற்க வைக்க வேண்டும் என்பதில் எல்லோருமே குறியாக உள்ளனர். ஏற்கனவே இத்திட்டத்தினை பொசுனிய குரோசியரும் முசுலிம்களும் பூரணமாக வரவேற்காத போதும் தாமேற்பதாக கூறிவிட்டனர். இப்புதிய அமைதித்திட்டம் 51-49விழுக்காட்டுத் திட்டம் என சுருக்கமாக அழைக்கப்படுகின்றது. பொசுனியர் கேர்சகோவினாவை ஒருவிதநெகிழ்ச்சியானஇணைப்பாட்சியின் கீழ்சேர்பியருக்கு 49 விழுக்காடுபகுதியும்குரோசிய முசுலிம்கட்கு 51 விழுக்காட்டு நிலப்பகுதியும் வழங்கும் திட்டமிது. அத்தோடு சரயேவோ போன்ற முக்கிய நகரங்கள் ஐ.நாவின் மேற்பார்வையிலும் வேறுசில ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் கண்காணிப்பிலும் சில நகரங்களின் நிருவாகம் மூவினத்தவருக்கிடையில் பகிர்ந்து அளிக்கப்படுவதாகவும் இத்திட்டம் அமைகின்றது. இப்போது 28 விழுக்காட்டு நிலத்திலே 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட முசுலிம் அகதிகளை கொண்டிருக்கும் முசுலிம்கள் 44 விழுக்காட்டு பொசுனியச் சனத்தொகையை முன்னர் கொண்டிருந்தவர்கள். எனவே இவர்கட்கு இத்திட்டம் ஏற்புடையதாக இல்லாத போதும் பொசுனிய சேர்பியரை

என பொருமுகின்றனராம். அத்தோடு சரயேவோ நகர நிருவாகத்தில் தமக்கும் பங்கு வேண்டும் என்றும் கோரும் சேர்பியர் தமது நிருவாகத்தின் கீழ் வரும் பொசுனிய சேர்பியப்பகுதி பிற்காலத்தில் பரந்த சேர்பியா என்கிற அடிப்படையில் சேர்பியா நாட்டோடு இணையத் தக்கதான தனிநாடாக மாறத்தக்கவகையில் அரசியல் யாப்பில் மாற்றங்களை இவர்கள் கோருவதாகவும் தெரிகின்றது. ஆனால் ஏதோ ஒரு வகையிலாவது பொசுனியா சட்டரீதியாக ஒரு நாடு போன்ற தோற்றத்தினையாவது கொண்டதாக இருக்க வேண்டும் என்றே பொசுனிய அரசு வலியுறுத்தி வருகின்றது. இவ்வமைதித்திட்டம்ஏற்காத நிலையேற்படுமிடத்து ஐ.நாவின் அமைதிப் பணியை விலக்குவது பற்றி ஐ நா தரப்பில் சிந்திக்கப்படுவதாக தெரிகின்றது ஏனென்றால் பல ஐரோப்பிய நாடுகள் தொடர்ந்தும் தமது படைகளை பொசுனியப் பகுதியில் வைத்திருக்க இப்போது விரும்பவில்லை. அனேகமாக நீண்ட காலத்திற்கு இழுபறியானநிலையால் பொசுனியச் சிக்கல் தொடரலாம் என்கிற ஐயமும் இப்போது எழுப்பப்படுகின்றது.

எனவே இத்தகைய நிலையிலே பொசுனியச் சேர்பியர் மீது மிகக் கடுமையான தாக்

டியை இந்நாடுகள் எதிர்நோக்குகின்றன. இங்குள்ள சேர்பியரின் வாழ்க்கைத்தரம் மிக மோசமான அளவுக்கு கீழிறங்கிவிட்டன. அத்தோடு அமெரிக்கா நேட்டோ தரப்பினர் இராணுவத் தாக்குதல்களை முனைப்பாக மேற்கொள்ள முடிவு எடுத்திருப்பதும் முற்றிலுமாக உலகிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டிருப்பதும் இவர்கள் மன மாற்றத்திற்கு காரணம் இப்போது நடப்பது என்னவென்றால் சேர்பியர் எல்லைகளிலிருந்து பொசுனிய சேர்பியருக்கு எத்தகைய உதவிகளும் கிடைக்காமல் தடுப்பது பற்றி ஐ.நா பிரதிநிதி மிலோசவிச்சோடு பேசத்தொடங்குகிறார். அவ்வாறே பொசுனியச்சேர்பியர்மீது தமது செல்வாக்கை செலுத்த முடியாத நிலையில் ருஷ்யாவும் பின் வாங்குகின்றது அத்தோடு கடும் எரிச்சலும் சேர்பியர் மீது கொண்டி

## பாலகுமாரன்

ருப்பதாக தெரிகின்றது.

இத்தகைய மாற்றங்கள்ஒருபுறமிருக்க பொசுனியக்குரோசியர் முசுலிம்கள் தரப்பில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் முக்கியமானவை. தம்கையே தமக்குதவி என்கிற நிலையில்

தேவையான கனரக ஆயுதங்கள்இப்போது குரோசியர் தரப்பிலிருந்து பொசுனியர்க்கு கிடைக்கத் தொடங்குகின்றது. அத்தோடு பொசுனியாவிற்கு எதிரான ஆயுதத்தடை விரைவில் நீக்கப்படுமிடத்து நிலைமைகளில் மாற்றமேற்படும் நிலை. ஏனென்றால் மனிதவலு கூடுதலாக இருந்த போதும் ஆளணி குறைந்த சேர்பியரின் கனகர ஆயுதங்களின் முன்னால் முசுலிம்கள் தோல்வியை தழுவ நேரிட்டது. (கடந்த 2 வருடமாக 1,5 மில்லியன் செல்கள் சரயேவோ மீது ஏவப்பட்டதாக ஆச்சரியமூட்டும் தகவலொன்று அண்மையில் அமெரிக்க தரப்பால்வெளியிடப்பட்டது அத்தோடு 1992 போர் தொடங்கிய போது பொசுனியச் சேர்பியர்க்கு நிலைமைகள் மிகச்சாதகமாக இருந்தன. சேர்பிய சனாதிபதி மிலோசவிச் பொசுனிய பகுதியில் தரித்து இருந்த தமது இராணுவத்தினையும் அவர்களின் கனரக தளபாடங்களையும் இவர்களிடம் ஒப்படைத்தமையே இதற்கு காரணம். ஆனால் இப்போது தன்னம்பிக்கை பெற்ற பொசுனிய முசுலிம்கள் இயங்காதிருந்த பல தமது இராணுவத் தளபாடதொழிற்சாலைகளை இயங்க வைக்கின்றனர். தானியங்கி துப்பாக்கிகள்ஏவுகணைகள் கைக்குண்டுகள் துப்பாக்கி ரவைகள் எனப் பலவற்றை தயாரிக்கும் தொழிற்சாலைகள் இப்போது இயங்க மீண்டும் தொடங்கி விட்டன. அதுமட்டுமன்றி சேர்பியருக்கு எதிராக சில போர் நடவடிக்கைகளை இப்போது அவர்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளத் தொடங்குகின்றனர். முற்றிலுமாக வெற்றிகாண முடியாவிட்டாலும் மூன்று தினங்கட்கு முன்னர்

தான் சேர்பியர் ஆதரவோடு சண்டையிட்டு ஒரு பகுதியை தனதுகட்டுப்பாட்டில் வைத்திருந்த கிளர்ச்சி முசுலிம் தலைவரொருவரின் படைகளை முற்றாக தோற்கடித்து பொசுனிய அரச படை

...கின்றனர். இது ஒரு புதிய திருப்பமாகும். சேர்பியரின் கொடுங்கோன்மைக்கு என்றாவது ஒருநாள் முடிவேற்பட்டே தீரும் என பொசுனிய குரோசியரும். முசுலிம்களும் இப்போது நம்பத் தொடங்குகின்றனர். பொறுமை என்பது எல்லை கடந்த நிலையில் ஐ. நாவும் ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்காவும் ஏன் ருஷ்யாவுமே இப்போது இரண்டிலொன்று முடிவைக் காண முடிவு எடுத்துவிட்டன.

ஏனென்றால் ஏற்கனவே பொசுனியாவின் 72 விழுக்காடு நிலப்பகுதியை கைப்பற்றி சேர்பியர் வைத்திருக்கும் நிலையில் - தமது சுத்திகரிப்புப்பணி முடிந்துவிட்டதுஎன தீர்வினை ஏற்க பொசுனிய சேர்பியர் மறுத்தமையாகும். அதே சமயம் பொசுனியாவிற்கான சருவதேச ஆயுத தடையை விரைவில் நீக்குவது பற்றியும் இப்போது ஆராயப்படுவதால் முசுலிம்கள் குரோசியர் கை ஓங்க வாய்ப்பு ஏற்படக் கூடிய சூழல் தோன்றுகின்றது. அத்தோடு கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து குரோசியரும், முசுலிம்களும் தமக்கிடையில் இணைப்பாட்சி ஒன்றினை (Federation) ஏற்படுத்திவிட்டமை இன்னொரு காரணம். தமக்கிடையில் மோதிவந்த பொசுனிய குரோசியரும் முசுலிம்களும் ஒன்றுபட்டமையால் இவர்கள் பலம் இப்போது அதிகரிக்கின்றது. ஆனால் பொசுனி முன்னைநாள் யூகோசிலேவியப்பகுதிகளில்வாழும் 20இலட்சம்சேர்பியரைஅடக்கியபரந்த சேர்பியக் கனவினை இன்னமும் காண்கின்றனர். இதனாலே மிக அண்மையில் பொசுனிய சேர்பியத்தலைவரானறடோவான் கரஜிச் (Radovon Kar-adzic) ''பட்டினி கிடந்தாலும் உடுக்க துணியின்றி வெறும் காலோடு அலைந்தாலும் எமது போராட்டத்தினை நிறுத்தோம்'' என்றும் கடைசியாக முன்வைக்கப்பட்ட அமைதித் திட்டத்தை ''அமெரிக்கசதி'' என்றும் கூறினார்.

இவர்கள் நிலை இவ்வாறிருந்த போதும் இத்திட்டத்தி
மேற்பட்டமுசுலிம்அகதிகளை கொண்டிருக்கும் முசுலிம்கள் 44 விழுக்காட்டு பொசுனியச் சனத்தொகையை முன்னர் கொண்டிருந்தவர்கள். எனவே இவர்கட்கு இத்திட்டம் ஏற்புடையதாக இல்லாத போதும் பொசுனிய சேர்பியரை முற்றிலுமாக தனிமைப்படுத்த இது வாய்ப்பு எனக்கருதி இத்திட்டத்தினை ஏற்பதாக கூறிவிட்டனர். அவ்வாறே குரோசியரும்;

பொசுனிய சேர்பியரை பொறுத்த வரையில் அவர்கள் இனச்சுத்திகரிப்பு செய்த பல நகரங்கள் இத் திட்டத்தின் கீழ் அவர்களிடமே வந்த போதும் தாம் பறித்துக் கொண்டதோ 72 விழுக்காடு ஆனால் தரப்பட்டதோ 49 விழுக்காடு
விரும்பவில்லை. ...
நீண்ட காலத்திற்கு இழுபறியானநிலையால் பொசுனியச் சிக்கல் தொடரலாம் என்கிற ஐயமும் இப்போது எழுப்பப்படுகின்றது.

எனவே இத்தகைய நிலையிலே பொசுனியச் சேர்பியர் மீது மிகக் கடுமையான தாக்குதலை முன்னாள்யூகோசிலேவியாவின் மிஞ்சிய சேர்பியாவினதும் மொண்ரிநிகிரோ தலைவர்களும் மேற்கொள்கின்றனர். ஏனென்றால் புதிய அமைதித் திட்டத்தை இவர்களால் பொசுனியச் சேர்பியரை ஏற்க வைக்க முடியவில்லை. வளர்த்த கடா மார்பில் பாயும் நிலை இது. அத்தோடு சருவதேச பொருண்மியத் தடை காரணமாக தாங்கொணாத பொருண்மிய நெருக்கடியிருப்பதாக தெரிகின்றது.

இத்தகைய மாற்றங்கள்ஒருபுறமிருக்க பொசுனியக்குரோசியர் முசுலிம்கள் தரப்பில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் முக்கியமானவை. தம்கையே தமக்குதவி என்கிற நிலையில் சருவதேச நடுவர் முயற்சிகள் தோல்வியுற்று ஐ. நா. படை வெளியேறினாலும் தொடர்ந்து போரிடத் தக்கதான மனநிலையை இவர்கள் இப்போது அடைகின்றனர். குறிப்பாக அமெரிக்க அழுத்தத்தால் குரோசியத் தலைவர் பிரான்கோ துஜ்மன் (Franco Tudjman) தமது பரந்த குரோசிய நிலைப்பாட்டைக் கைவிட்டு பொசுனிய இணைப்பாட்சிக்கு சம்மதித்தபின் தான் சேர்பியர் ஆதரவோடு சண்டையிட்டு ஒரு பகுதியை தனதுகட்டுப்பாட்டில் வைத்திருந்த கிளர்ச்சி முசுலிம் தலைவரொருவரின் படைகளை முற்றாக தோற்கடித்து பொசுனிய அரச படைகள் வெற்றியீட்டின. ''இப்போது முசுலிம்களின் முறை'' என்கிறதுநியுஸ்வீக் இதழ். எனவே இப்போது பொசுனிய முசுலீம்கள் ''இப்போதுதான் தமது போர்ஆரம்பிப்பதாக'' கூறத்தொடங்குகின்றன.

எனவே இதுவரை காலமும் மேற்கத்தைய இராணுவத் தலையீட்டை நம்பி காலம்கழித்தவர்கள் தற்சார்பு என்பது அவசியம் என உணரத்

(6ஆம் பக்கம் பார்க்க)

# சிறுகதை

## தானம்

மீரா

''ஓ நெகற்றிவ்'' ''பிளட் உடனடியாகத்தேவை'' டாக்டரின் உத்தரவிற்கிணங்கி அந்தத் தாதி விரைவாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தாள்.

போய் விடுவோமா? அல்லது இரத்சம் வருமா? தொடர்ந்து இந்த உடலிலேயே இருப்போமா? என எண்ணிக் கொண்டிருந்த உயிரை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்தது உடல்.

சிறிது நேரத்திற்கு முதல் தான் வல்லை வெளிப் பகுதியில் விழுந்த ஷெல்லினால் வயிற்றுப்பகுதியில் பெரும் காயத்துடன் யாரோ வழிப்போக்கர்கள் அந்தப் பெண்ணைக் கொண்டு வந்திருந்தனர். அவசர சிகிச்சைப் பிரிவு அவசரப்பட்டுக் கொண்டிருந்தது, இரத்த வங்கிக்குச் செய்தி பறந்து சென்றது. நேரமோ நகர்ந்து கொண்டிருந்தது.

★ ★

''சந்திரா, சந்திரா'' நாலாம் முறையும் கூப்பிட்டு அவன் திரும்பிப் பாராததால் எரிச்சலுற்று ''டேய் சந்திரா'' சற்றே உரக்கக் கத்தினான் பிரதீப்.

அவன் குரல் கேட்டுத் திடுக்குற்றுத் திரும்பிப் பார்த்தான் சந்திரசேகரன்

''இவ்வளவு நேரமாக்கத்திறன் எந்த உலகத்தில இருக்கிறாய்''

அதட்டலாய்க் கேட்ட நண்பனை சிரித்து பழுப்பியபடி,

''ஏன், என்ன'' என்றான் சந்திரன்

''ஸ்ரீதர்ல சனிக்கிழமை படம் பார்ப்பமே''

கேட்டவனை ஆச்சரியத்துடன் நோக்குகிறான் அவன்.

''சனிக்கிழமை கிளாஸ் இருக்கெல்லே''

வினாவியவனை நோக்கிக் கண்சிமிட்டுகிறான் பிரதீப்.

''மச்சான், உனக்குமூளையே கிடையாது; நாளைக்கு நைன் தேட்டி ரூ ரென் தேட்டி கெமிஸ்ரி கிளாஸ்பிறகு வண் மட்டும் ஃப்ரீ மற்ஸ் மாஸ்டர் கொழும்புக்கெல்லே போட்டார், பத்தரைக்கு ஒரு ஸோ இருக்கு போனால் வண்ணுக்கு பிஸிக்ஸ் கிளாசுக்கு இருக்கலாம். கெமிஸ்ரி கிளாஸ் தான் கட் பண்ண வேணும் சப்பல் சப்ஜெக்ட்தானே, எவனிட்டையாவது நோட்ஸைப் பார்த்து எழுதினால் சரி,''

படிப்பில் ஓடாத பிரதீப்பின் மூளை எல்லாம் இதில் ஓடியது.

''இல்லை நான் வரேல்லை''

எடுத்த எடுப்பில் சந்திரன் மறுத்துவிட பிரதீப்பின் முகம் சுருங்கியது.

''சரியான லூசன்டா நீ, பார்த்துக் கொண்டே இரு எங்கட பச்சிலேயே கம்பஸ்ஸில போய்க் குதிக்கிற முதல் ஆள் நீதான்''

சென்ற தவணைப் பரீட்சைக்குதான் அவனைவிட அதிக புள்ளிகள் பெற்றதை எண்ணி நக்கலடித்தபடி நகர்ந்தான் பிரதீப்.

ஆனால் சந்திரன் வேறுதிட்டம் போட ஆரம்பித்தான். இன்று காலை பத்திரிகை பார்த்ததிலிருந்து குழம்பிக் கொண்டிருந்த பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்தது போலிருந்தது.

அன்றைய பத்திரிகையில், சிறுவன் ஒருவனுக்கு உடனடியாக ''ஓ நெகற்றிவ்'' இரத்தம் தேவை என்றும் வழங்கக் கூடியவர்கள் உடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ் போதனா வைத்திய சாலை நலன் புரிச் சங்கம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

அதைப் பார்த்ததிலிருந்து அவனுக்கு அதே யோசனை தான், வகுப்பறையில் உடல் தான் இருந்தது நினைவுகள் ஆறேழு மாதங்கள் முன்நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அன்று பாடசாலையின் சோசல் சேவிஸ் கிளப்பின் சார்பாகப் பல மாணவர்கள் இரத்ததானம் செய்த போது இவனும் அதில் ஒருவனாக இருந்தான். அன்று தான் சந்திரனுக்குத் தன் இரத்தம் ''ஓ நெகற்றிவ்'' குரூப்பைச் சேர்ந்ததென்று தெரியும் மிகவும் அரிய குரூப் என்று எல்லோரும் கூற அவனுக்கு ஏதோ ஒருபிடிபடாத மகிழ்ச்சி அவ்வளவு பேருக்குள்ளேயும் ஏதோ பெரிய ஹீரோ, போன்றதொரு எண்ணம்.

சந்தோஷமாக வீடு சென்றவன் ''அம்மா விஷயம் தெரியுமோ'' என்று கதையை அவிட்டுவிட கிணறு தோண்ட பூதம் கிளம்பிய கதையாய் பூகம்பமே கிளம்பி விட்டது.

''உன்னை ஆர் இரத்தமெல்லாம் குடுக்கச் சொன்னது? எங்களை ஒரு வார்த்தை கேட்டனியே இந்த வல்லேக்கால ஸ்கூலுக்கும்ரியூசனுக்கும் அலை அலையெண்டு அலைஞ்சு உடம்பில சத்தே இல்லை கண்டறியாத தானம் கொடுக்க வெளிக்கிட்டிட்டார் தானம். இஞ்ச பாருங்கோ இவனை, என்ன செய்திட்டு வந்திருக்கிறானெண்டு''

ஏதோ கொலையே செய்துவிட்டதைப் போல கத்திப் புலம்பி பத்தாததற்கு அப்பாவிடமும் கூற அவரும் தன்ரை பங்கிற்கு திட்ட சந்திரனுக்கே ஒரு கணம் ஐயம் ஏற்பட்டது ''நான் ஏதும் தவறு தான் செய்திட்டனோ'' என்று, ஆனாலும் இவர்கள் அந்தக் காலத்தலை இப்படித்தான் என்று சமாதானப்படுத்திக் கொண்டான் அவன்.

ஆனால் அவனின் சமாதானத்தையும் உடைத்தெறிவது போல அன்றைய பிற்பகல் அமைந்தது. வேலை முடிந்து வீடு வந்த அண்ணனுக்கு ஓய்ந்து போயிருந்த அம்மா பல்லவி பாட மீண்டும் பூகம்பம் தான், ஆனால் படித்தவராய், இன்றைய காலகட்டத்தைப் புரிந்தவரானதுமான அண்ணனே இவ்வாறு இருப்பாரென்று அவன் எண்ணவில்லை.

''உனக்கேன் இந்தவேலை, ஊசி குத்தக்குத்த கான்சர், எயிட்ஸ் எண்டு பயங்கரபயங்கர நோய் எல்லாம் வந்திடும் தெரியாதே''

ஏற்கனவே கதிகலங்கிப்போய் நின்ற அம்மாவின் வயிற்றில் புளிகரைத்து ஊற்றியது போலிருந்தது,

''உண்மையாகவே தம்பி''

''பின்னை என்ன? எங்களுக்குத் தெரியாதே இரத்தம் கொடுக்க, இதால தானே அந்தப்பக்கமேபோறேல்லை''

தன் சுயநலத்திற்கு நியாயம் கற்பித்துக் கொண்டவர் தொடர்ந்தார்,

''ஏண்டா இந்த முறை தான் முதல்முதல் குடுத்தனியோ, அல்லது இதற்கு முதலும் குடுத்தனியோ''

''இண்டைக்குத்தான் முதல் தரம்'' முனகியவனை

''யாரோட போனனி, என்னண்டு போனனி, எல்லாரும் கட்டாயம் குடுக்கவேணுமே, ஏலா எண்டு சொல்லுறது தானே'' என்று ஏதோ கொலைக் குற்றவாளியைக் கூண்டில் நிறுத்திப்புரட்டி எடுப்பதுபோல் அவர் புரட்டிப் புரட்டிக் கேட்டபோது ''ஓ'' என்று போய் விட்டது சந்திரனுக்கு,

தொடர்ந்து வந்த நாட்களில் ஒவ்வொரு வேளைக்கும் புலம்பிப் புலம்பிச் சமைத்த ஸ்பெஷலாய் முட்டையும் மீனும் அவன் தட்டில் இருந்தன. தம்பியும் தங்கையும் ஏதோ எயிட்ஸ் காரனைப் பார்ப்பது போல தள்ளி நின்று பார்த்தனர், அதோடு நினைத்துக் கொண்டான், இனி வாழ்க்கையில இரத்தமும் இல்லை தானமும் இல்லை என்று

ஆனால் இன்று காலையில் பத்திரிகையில் அந்த அறிவித்தலைப் பார்த்ததிலிருந்து அவன் மனம் சலனப்படத் தொடங்கியது.

மூன்று மாதத்தில் வீணாக அழிந்து போகும் இரத்தம் உடலில் ஓடும் இரத்தத்தில் ஒரு சிறிய பங்கு, அவஸ்தைப்பட்டு பிரியும் ஒரு உயிரைப் பிடித்து நிறுத்துமானால்; அரைவழியில் ஓட நினைக்கும் உயிரை தங்க வைக்குமானால் அதனைக் கொடுப்பதில் என்ன தவறு?

யோசிக்க யோசிக்க தவறு எதுவுமில்லை என்பது தெரிந்தது ஆனால் அம்மாவுக்குத் தெரியாமல் காரியத்தை முடிக்க வேண்டுமென்ற எண்ணமும் தலை தூக்கியது.

தீர்வு கண்ட திருப்தியில் புன்னகையுடன் நினைத்துக் கொண்டான். சனிக்கிழமை கெமிஸ்ரி கிளாஸ் முடிய நேர கொஸ்பிட்டலுக்குப்

(6ஆம் பக்கம் பார்க்க]

# மலையகத்தில் சந்திரசேகரன் பெற்ற வெற்றி; அங்கு தமிழர் அரசியல் உரிமைக்கான குரல்


ஸ்ரீலங்காவின் அரசியல் அரங்கில் பல காட்சி மாற்றங்களை பத்தாவது பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் ஏற்படுத்தியிருப்பது தெரிந்ததே எனினும் இந்தக் காட்சி மாற்றங்களின் ஒரு அங்கமாக மலையகப் பகுதியில் ஒரு புதிய தலைமைத்துவம் தோன்றியிருப்பது குறிப்பிட்டுக் கூற வேண்டிய ஒரு விடயமாகும். பொதுவான 'ஜனநாயக' அரசியல் போக்கில் பெரும்பான்மையினர் ஆதரவு பெற்ற பிரதிநிதிகள் கையில் தலைமைத்துவப் பொறுப்பு இருப்பதே வழமையாகும். இருந்தும் மலையகத் தமிழர்களின் தனிப்பெரும் தலைவர் என்றும், மலையக தமிழர்களின் ஒரே அரசியல் நிறுவனம் இ.தொ.காவே என்றும் இருந்த நிலை நுவரெலியா மாவட்டத்தில். பெரியசாமி சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி பெற்றுக் கொண்டுள்ள ஒரே ஒரு ஆசனத்தின்மூலம் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

'ஜனநாயக' அரசியல் ரீதியாக மலையக மக்கள் முன்னணி மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு அரசியல் நிறுவனம் என்ற நிலையை எட்டியிருப்பதுடன், தேசிய அரசியலில் நிலவும் தளம்பமான நிலையின் காரணமாக முக்கியத்துவம் பெறும் சக்தியாகவும் மாறியிருக்கின்றது எனவேதான் இக் கட்சியின் தோற்றம், எதிர் நோக்கிய சவால்கள், இதன் தன்மை, நோக்கங்கள் என்பன இன்று முக்கியம்பெறுகின்றன.

### சந்திரசேகரனின் அரசியல் பின்னணி

மலையகத்தின் நுவரெலியா மாவட்டத்தில் தலவாக்கல நகரப் பகுதியில் 'பஞ்சலிங்கம் ஸ்ரோர்ஸ்' என்னும் புடவை விற்பனை நிலையத்தின் உரிமையாளரான பெரியசாமி சந்திரசேகரன் மிக நீண்ட காலமாக அரசியல் ஈடுபாடு உடையவர். இளம் பராயத்தில் இடதுசாரிகளுடன் ஈடுபாடு கொண்டிருந்த இவர் பின்னர் மலையக மக்கள் வெகுஜன இயக்கத்தின் முக்கிய பிரமுகராக செயற்பட்டார் எனினும் எழுபதுகளில் திருமதி சிறிமாவோவின் ஆட்சியில் நிலவிய கெடுபிடிகளின் காரணமாக இவ் இயக்கம் சீர்குலைந்ததை அடுத்து இ.தொ.கா. என்னும் இலங்கை தொழிலாளர் காங்கிரசுடன் தன்னை இணைத்துக் கொண்டார். 1977இல் நுவரெலியா மாவட்டத்தில் பொதுத் தேர்தலில் 'சேவல்' சின்னத்தில் போட்டியிட்ட தொண்டமானின் வெற்றிக்காக பாடுபட்டவர். தொடர்ந்து இ தொ காவின் அரசியல் பிரிவில் முக்கிய பிரமுகராக செயலாற்றி வந்தார்.

எனினும் தொழிற்சங்க நடவடிக்கைகளுடன் மட்டும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாமல், சமூக மேம்பாடு, அடிப்படை உரிமைகள், மலையக நிலப்பகுதியில் மலையகத் தமிழர்களுக்குள்ள உரிமை என்பன போன்ற பல்வேறு விடயங்களிலும் கவனம்செலுத்தி வந்தார் இதன் காரணமாக இ.தொ.காவின் தலைமைப்பீடத்தின் விமர்சனங்களுக்கும் கண்டனங்களுக்கும் இவர் இலக்காகி வந்தமை குறிப்பிடத்தக்கது. உதாரணமாக கூறுவதாயின் 1986இல் மலையக இளைஞர்கள் சிறிலங்கா சிறைகளில் வாடுவதைக் கண்டித்து தலவாக்கல நகரத்தில் மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டம், அதே ஆண்டில் தலவாக்கல பகுதியில் பதற்ற நிலை தோன்றி மக்கள் அகதிகளாக வெளியேற்றப்பட்ட போது நிலைமையை லாவகமாக கையாண்டு மக்களை மீண்டும் தோட்டங்களுக்குச் சென்று வாழ வழி சமைத்தமை என்பனவற்றைக் குறிப்பிடலாம். இச்சம்பவங்களின் போதெல்லாம் இ.தொ.கா. தலைமையின்விமர்சனங்களுக்கும், கண்டனங்களுக்கும் இலக்கான போதும் தொடர்ந்தும் இ.தொ.காவின் உறுப்பினராகவே இவர் செயற்பட்டு வந்தார். 1989இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் நுவரெலியா மாவட்ட வேட்பாளராக இ.தொ.கா சார்பில் போட்டியிட விரும்பிய போதும், இதுவரை இ தொ கா தலைமை ஆதரிக்கவில்லை முத்து சிவலிங்கம் எஸ் சதாசிவம் ஆகியோரை இ தொ கா நுவரெலியா மாவட்ட வேட்பாளராக்கியதும் இவர் இ.தொ.காவிலிருந்து வெளியேறி அத்தேர்தலில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) யின் வேட்பாளராகப் போட்டியிட்டார் சுமார் பத்தாயிரத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றபோதும் பாராளுமன்ற ஆசனங்கள் எதையும் அவரால் பெற்றுக் கொள்ள முடியவில்லை. எனினும் தேர்தல் முடிவுகளையடுத்து ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியுடனான உறவை முறித்துக் கொண்டு மலையக மக்கள் முன்னணி என்னும் அமைப்பை நிறுவினார்.



### மலையக மக்கள் முன்னணியின்தோற்றம்

இலங்கையில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் மலையக மக்களின்பிரச்சினை தனித்துவமானதும், மிகவும் சிக்கலானதும் கூட. தோட்டங்களில் அவர்களது வேலை நிலைமைகளில் எதிர்நோக்கப்படும் அன்றாட பிரச்சினைகள் ஒருபுறமும் தொழிலாளர்களின்குடியிருப்புகளான லயன்களில் வசதிகளை ஏற்படுத்துவது பற்றிய சிக்கல் மற்றுமொருபுறம், கல்வி மற்றும் சுகாதாரப்பிரச்சினைகள்இன்னுமொருபுறம், இவை தவிர வேலை நாள் குறைப்பிற்கு எதிரான நடவடிக்கை ஊதிய உயர்வுக்கான போராட்டம் என்பன போன்ற பல்வேறு சிக்கல்களும் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு ஊடாக தீர்க்க வேண்டியிருக்கின்றது. மற்றுமொரு வகையில் குடியுரிமையை மீளப்பெறுதல், பாடசாலைகள் நிறுவுதல், குடியிருப்புக்களை சொந்தமாக்கல் என்பன போன்ற பல்வேறு விடயங்கள் அரசியல் அரங்கில் எழுப்பப்பட வேண்டியவையாக இருக்கின்றன.

இந்த நிலையில் மலையக மக்கள் முன்னணி பத்தோடு பதினொன்றாக தன்னையும் ஒரு தொழிற்சங்கமாக மாற்றிக் கொள்ளாமல் அரசியல் உரிமைகளை நிலைநாட்டுவதற்கான ஒரு அமைப்பாக தன்னைப் பிரகடனப்படுத்தியது. இலங்கையின் ஏனைய பகுதிகளில் தமிழர்கள் தமது தாயக விடுதலையை மீளப் பெறுவதற்காக நடத்தும் போராட்டத்திற்கு தார்மீக ஆதரவை வழங்குவதாக முன்னணி ஆரம்பத்திலேயே அறிவித்திருந்தது.

மத்திய மாகாணம் சப்பிரகமுவ மாகாணம் ஊவா மாகாணம்என்பவற்றில் இருக்கும் தமிழர்களை பெரும்பான்மையாகக் கொண்ட பகுதிகளைஒருங்கிணைத்துதனியான புதிய ஒரு மாகாணம் அமைக்கப்பட வேண்டும் என்றும், உள்ளூராட்சி நிர்வாகங்களில் மலையகத் தமிழர்களுக்கும் பங்கு கிடைக்கும் வகையில் தோட்டங்களின் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு கிராமங்களாக்கப்பட வேண்டும் என்றும் முன்னணி வலியுறுத்தியது. இலங்கையின் ஏனைய குடிமக்களுக்கு இருக்கும் அனைத்து உரிமைகளும், சலுகைகளும், வாய்ப்புகளும், வசதிகளும் மலையக மக்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும் என்றும் அதற்காகப் பாடுபடப் போவதாகவும் முன்னணி தெரிவித்திருந்தது. இந்திய வம்சாவளியினரான மலையக மக்கள் இலங்கையில் ஒரு தனியான தேசிய இனம் என்று மலையக மக்கள் முன்னணி வரையறை செய்தது.

### எதிர் நோக்கிய சங்கடங்கள்

இவ்வாறாக மலையக, மக்கள் முன்னணி தனது நோக்கங்களையும், இலக்குகளையும் வகுத்துக்கொண்டு செயற்பட்ட போதும், வழமையான தொழிற்சங்கங்களில் ஒன்றாகவே கருதிய மலையக மக்களின் மனப்பாங்கு ஒருபுறமும், பத்தோடு பதினொன்றாக புதிய ஒரு தொழிற்சங்கம் ஒன்று மற்றைய தொழிற்சங்கங்களின் போட்டி மனப்பாங்கு மறுபுறமுமாக மலையக மக்கள் முன்னணிக்கு ஆரம்பத்தில் பல சங்கடங்களை தோற்றுவித்தது. இவற்றை வெற்றி கொள்வதற்காக முன்னணி அயராது பாடுபட வேண்டியிருந்த சந்தர்ப்பத்தில் தான் கூட்டுப்படைத் தலைமையகத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்பு சம்பவத்துடன் தொடர்புபடுத்தப்பட்ட நிலையில் முன்னணியின் நடவடிக்கைகள் மீது படையினர் கவனம் திரும்பியது. முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன், செயலாளர் பாவா அப்துல் காதர், பொருளாளர் வி. ரி. தர்மலிங்கம் உட்பட பலரும் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர். முன்னணியின் செயலகங்கள் இரகசியப் பொலிசாரின் கண்காணிப்புக்கு இலக்காகியது. முன்னணியின் முக்கிய உறிப்பினர்கள். தேடுதலுக்கு இலக்கானார்கள் சித்திரவதைக்கும் சிறைவாசத்துக்கும் உட்பட வேண்டி இருந்தது.

இத்தனை சங்கடங்களுக்கும் மத்தியில் மாகாணசபைக்கான தேர்தல் இடம்பெற்ற போது முன்னணி அதில் கலந்து கொண்டு போட்டியிட்டது. வெற்றியும் ஈட்டியது. ஆசனங்களையும் கைப்பற்றியது எனினும் தலைவர் சந்திரசேகரன் பதவி ஏற்பதைத் தடுக்கும் வகையில் சூழ்ச்சி வலைகள் பல பின்னப்பட்டன. இவற்றின் விளைவாக நீதிமன்றம் பதவியேற்புக்கு அனுமதி வழங்கிய போதும்பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி அது மறுக்கப்பட்டது. இருந்தும் இலங்கை தொழிலாளர் காங்கிரசில் ஏற்பட்ட பிளவும், தொண்டமானைப் பல வீனப்படுத்த வேண்டும் என்னும் டி. பி. விஜேதுங்கவின் இலக்கும், இணைந்து கொண்டதொரு அரசியல் சூழ்நிலையில் முன்னணியின் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டது. புது உத்வேகத்துடன் மலையக மக்கள் முன்னணி செயற்பட்டது. பொதுத் தேர்தல் இடம் பெற்ற சமயத்தில் சுயேட்சைச் குழுவாகப் போட்டியிட்டு ஒரு இடத்தையும் இப்போது பெற்றுக் கொண்டுள்ளது.

### மலையக அரசியலில் மாற்றம்

மலையகத்தின் அரசியல் பெரும்பாலும் தொழிற்சங்க நடவடிக்கைகளால் கட்டுப்படுத்தப்பட்டதாகவும், அன்றாடப் பிரச்சினைகளான வேலை வாய்ப்பு சம்பள உயர்வு, குடியிருப்பு வசதி போன்றவற்றின் எல்லைக்குள் மட்டுப்படுத்தப்பட்டதாகவுமே இதுவரை காலமும் இருந்து வந்துள்ளது வெளிப்படை, எனினும் தொழிற்சங்கமாக செயற்படாத ஒரு வெகுஜன அமைப்பிலிருந்து சுயேட்சையகப் போட்டியிட்ட ஒருவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப்பெற்றிருப்பது இதுவே முதல் முறை எனலாம். அதிலும் மிகவும் சிக்கலான விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் இடம் பெற்ற தேர்தலில் இத்தெரிவு இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க தொன்றாகும். இதன் மூலம் மலையக மக்கள் மாற்றம் ஒன்றை விரும்புகின்றனர் என்பது துல்லியமாக துலங்க வைக்கப்பட்டுள்ளது.

மலையக மக்கள் முன்னணி பொதுஜன ஐக்கிய முன்னணியுடனான உடன்பாட்டில் சுட்டிக் காட்டியுள்ள ஆறு அம்சங்களும் இம் மாற்றத்தைக் கோடி காட்டுவதாகும். தனிமனிதர்களின்கவர்ச்சியை மட்டும் மையப்பொருளாக்கி அன்றாடச் சிக்கல்களுக்கு தீர்வு காண்பதை மட்டும் செய்துகொண்டு அரசியல் நடாத்தும் தொழிற்சங்கங்களின் போக்கிற்கான எதிர்ப்பு முளைவிட்டுள்ளது என்பதையும்மலையகத்தில்கால்பதித்து நின்று தமது உரிமைகளுக்காக குரல் கொடுக்க வேண்டும் என்பதையே மலையக மக்கள் விரும்புகின்றனர் என்பதையும் சந்திரசேகரனின் வெற்றி சுட்டிக் காட்டுகிறது என்றால் மிகையானதல்ல

**இளையவன்**

உயிரோடு புதைக்கப்பட்ட உடல்கள்
நான்காம் ஆண்டில் கொடூர நினைவுகள்

ம.நர்மதன்
ந.சுதன்
(போராளிகள்) எழுதிய
தேசி குறிப்பிடச்

# நான்காம் ஆண்டில் கொடூர நினைவுகள்

1990 ஆகஸ்ட் 25; தீவக மக்களால் மறக்க முடியாத நாள், தனித்துவமான அம்மண்ணில் சிறிலங்கா இராணுவம் கால் பதித்துக் கொண்டது அன்றுதான். இயற்கைத் தாலாட்டின் இனிமையில் வாழ்ந்த மக்களின் வாழ்வு ஒரு கணப் பொழுதில் சின்னாபின்னமாகியதும் அன்றுதான் உயிர், உடைமை இப்படி எண்ணரிய இழப்புக்கள் உதிக்கும் கதிரவன் ஒளியில் உலங்கு வானூர்திகளின் உறுமல்கள், பொம்மர்கள், கண்போட் ஆகியவற்றின் அலறல்கள் தீவக மண்ணையே திணறவைக்கிறது சொந்த மண்ணிலே துவண்டு போன அந்த நிஜமான நிகழ்வின் நினைவில நான்கு ஆண்டுகள் இன்றோடு பூர்த்தியாகிறது. எனினும் அந்தத் துன்பத்தின் மனவடு, அடிமனத்திலிருந்து இன்றும் அகலவில்லை மாறாக அகன்றுதான் இருக்கிறது.

கோட்டையைக் கைப்பற்ற வேண்டுமென்ற பேராசையுடன் காரைநகர் கடற்பரப்பினூடாக ஊர்காவற்றுறையினுள் நுழைந்த இராணுவம் கரம்பொன், நாரந்தனை, சரவணை, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி ஊடாக ஆகஸ்ட் 25-ந் திகதி மாலைப்பொழுதில் மண்டைதீவை முற்றுகையிட்டது சண்டப் பிரசண்டமாக வந்த இராணுவத்தின் குண்டுகளுக்கு சிறுவர் முதல் முதியவர் வரை பலர் இரையாகினர். இராணுவ முற்றுகையின் போது தீவக மண்ணை விட்டு வெளியேற முடியாத சூழ்நிலை. தீவுப் பகுதியையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும்பண்ணைப்பாலம் கோட்டையில் இருந்த இராணுவத்த ல்குறிபார்த்த வண்ணம் இருந்தது இது தவிர அராலி, நாவாந்துறை குருநகர் ஊடான கடல் வழிப் பாதை உலங்கு வானூர்திகளின் ஆக்கிரமிப்பிற்கு ஆளாகியது .இந்நிலையில் மக்கள் ஆலயங்களில் தஞ்சம் புகுந்து அந்நியனின் பிடியில் சிக்கிக் கொண்டனர்.

## அப்பாவிகள் சுட்டுக்கொலை

மண்டைதீவு புனித சம்பேதுருவானவர் ஆலயத்தில் தஞ்சம் புகுந்த அப்பாவிப் பொதுமக்கள் சிலரை இராணுவம் அதே இடத்தில் சுட்டுக்கொன்றது, பாதுகாப்புத் தேடி பதுங்கு குழிக்குள் இருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேருக்கு பதுங்கு குழியே சவக்கிடங்காகியது இது தவிர ஆலயங்களில் தஞ்சமடைய ஓடிச் சென்றவர்கள் எழுந்து நடக்க முடியாத வயோதிபர்கள் என்று நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்த உயிர் கொல்லும் படலத்தில் உலங்குவானூர்தியும் 'கண்போட்டும்' கணிசமான பங்கை ஆற்றியது. இந்நிகழ்வுகள் மண்டைதீவு மட்டுமன்றி அல்லைப்பிட்டி, மண்கும்பான், ஊர்காவற்றுறைப் பகுதியிலும் ஏராளமாக நடந்தேறியது.

## இளைஞர்கள் கைது

அல்லைப்பிட்டி, மண்டைதீவினுள் புகுந்த இராணுவம் அப்பாவிப் பொதுமக்களைச் சுட்டுக் கொன்றது மட்டுமல்ல ஆலயங்களில் அடைக்கலம் புகுந்த அப்பாவி இளைஞர்களையும் தனது விருப்பத்திற்கேற்ப அழைத்துச் சென்றது. இவ்விதம் இராணுவம் கூட்டிச் சென்ற இளைஞர்களில் 71 பேரின் நிலை, அவர்களுக்கு என்ன நடந்தது என்பது இன்றுவரை புரியாத புதிராகவேயுள்ளது. இராணுவத்தால் கூட்டிச் செல்லப்பட்ட தனது மகனின் நிலைமை கேட்டு மண்டைதீவைச் சேர்ந்த தாய் ஒருவர் உயர் நீதிமன்றில் வழக்குத் தொடுத்தார். ஆனால் சிங்களவன் மன்றில் நீதி ஏது? இன்றுவரை அந்த 71 இளைஞர்களும் உயிரோடு இருக்கிறார்கள் என்ற நினைவே அவர்களின் பெற்றோரிடம் குடிகொண்டுள்ளது.

## மண்ணின் மைந்தர்கள்

தம் இறுதி மூச்சு உள்ளவரை எம் மண்ணில்அந்நியன் காலடி வைக்க அனுமதியோம் என்று உறுதியுடன் போராடி 49 வீரவேங்கைகள் மண்டைதீவு மண்ணில் தம்முயிரை தியாகம் செய்தனர். இந்த வரலாற்று நிகழ்வு தமிழ் நெஞ்சங்களை நெருடியது. கடல்வெளி, சமவெளி ஆன அமைப்பைக் கொண்ட தீவகத்தில் இறுதி வரை போராடி உயிர்நீத்த 49 வீரவேங்கைகளின் வித்துடல்களும், இராணுவத்தின் கட்டளைப்படி, அவர்களினால் கைது செய்யப்பட்ட இளைஞர்களே ஒரு தோட்டக் கிணற்றினுள் போட்டு மூடிவிட்டார்கள்.

**ந. விஜயசுந்தரம்**

## நெஞ்சை நெகிழ வைக்கும் நினைவாலயம்

மக்களைக் காப்பாற்றத் தம்முயிரைத் தியாகம் செய்த 49 வீரவேங்கைகளும் துயிலுகின்ற அந்த நீர்த்தடாகத்தின் மேல் நினைவாலயக் கோபுரம் நிமிர்ந்துள்ளது. அக்கோபுரத்தின் காட்சி நெஞ்சை நெகிழ வைப்பது மட்டுமல்ல, நின்று வணங்கிச் செல்லவும் வழிசமைக்கிறது.

## புலிகளிடம் கோட்டை

இராணுவத்தின் பிடியில் அகப்பட்ட மண்டைதீவு, அல்லைப்பிட்டி மக்கள் ஆகஸ்ட் 27-ந் திகதி காலையில் அப்பகுதியில் இருந்து வெளியேற இராணுவத்தால் அனுமதிக்கப்பட்டார்கள். இவ்வாறு வெளியேறிய மக்கள் இராணுவம் இல்லாத மண்கும்பான் பள்ளிவாசலில் தஞ்சம் புகுந்தனர் சிலர் தமது வசதிக்கேற்ப வேறு இடங்களுக்கும் சென்றனர். கோட்டையைக் கைப்பற்ற வந்த இராணுவத்தை மண்டைதீவுச் சந்திக்கப்பால் முன்னேறப் புலிகள் அனுமதிக்கவில்லை. ஆனாலும் பயந்த இராணுவத்திற்குப் புலிகள் பெரும் உதவி செய்தார்கள். கோட்டையைத் தாங்களே கைப்பற்றிக் கொண்டார்கள். புலிக்கு யார்பலியாவமோ என்று ஏங்கிக் கொண்டிருந்த இராணுவம் நிம்மதிப் பெருமூச்சுடன் மண்டைதீவு, அல்லைப்பிட்டிப் பகுதியை விட்டு மீண்டும் ஊர்காவற்றுறையில் குடிகொண்டது.

## மீண்டும் சொந்த மண்ணில்

28 செப்ரெம்பர்90-ல் இராணுவம்வெளியேறியதைத்தொடர்ந்து அல்லைப்பிட்டி, மண்டைதீவு மக்கள் மீண்டும் தங்கள் சொந்த இடத்திற்குத் திரும்பினார்கள். மனித சடலங்கள், எரிந்த வீட்டின் கருகிய தூண்கள், இடிந்த கட்டிடங்கள், தரைமட்டமான பாடசாலைகள், தரையில் தலை வைத்துக் கிடக்கும் கற்பக தருக்கள், இவை எல்லாம் அங்கு கண்ட காட்சிகள் தான் பேய்களும், பிசாசுகளும் அங்கு ஆட்சி செய்ததை சாட்சியாக்கும் காட்சிகளும் கூட

## மூடிய கிணற்றுக்குள் எலும்புக் கூடுகள்

மண்டைதீவின் தோட்டப் பகுதியில் உள்ள பல கிணறுகள் இராணுவத்தால் புள்டோசர் மூலம் மூடப்பட்டிருந்தது எனினும் என்ன காரணத்திற்காக இவ்வாறு கிணறுகள் மூடப்பட்டது என்பதை மக்கள் உடன் உணர்ந்து கொள்ளவில்லை வேதனையின் விளிம்பில்அவர்கள் சிக்கித் தவித்ததே அதற்குக் காரணமாகும் எனினும் ஒருவருடத்தின் பின்பு வேலணை உதவி அரசாங்க அதிபர் யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தினர் ஊர் மக்கள் இணைந்து மூடப்பட்ட கிணறுகளைத் தோண்டும் முயற்சியில் ஈடுபட்டனர் இதன் போது அங்கு, கைகால்கள் கட்டப்பட்ட நிலையில் எலும்புக் கூடுகள் இரத்தக் கறைபடிந்த மண் உக்கிப் போன உடைகள் ஏராளமாக மீட்கப்பட்டன.

சூட்டுக்காயங்களும், மண்ணில் புதையுண்டதனால் ஏற்பட்ட மூச்சுத் திணறலுமே மரணத்தை ஏற்படுத்தியுள்ளது என மருத்துவ பீடத்தினர் தெரிவித்தனர் இதன் படி உயிரோடு எம்மவர்கள் புதைக்கப்பட்ட கொடிய செயல் நடந்துள்ளது என்பது தெளிவு, காணாமல்போன இளைஞர்களின் தொகையை இராணுவம் சென்ற பின்பு பதுங்கு குழிகள், வீடுகளில் கிடந்த சடலங்களினதும் ஒருவருடத்தின் பின் கிணறுகளிலிருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளினதும் தொகையுடன் ஒப்பிடும் போது எல்லாம் அன்றே முடிந்த காரியம் தான் என்ற சந்தேகம் நம் உள்ளத்தில் எழத்தான் செய்கிறது. எப்படியாயினும் மூடப்பட்ட கிணறுகள் உடனடியாகத் தோண்டப்பட்டிருந்தால் நிச்சயம் சடலங்களை இனங்கண்டிருக்கலாம் என்பது தவறுக்குப்பின் உணர்ந்த உண்மை.

தமிழனின் எலும்புக்கூடு என்றபடியால் இச்சமாசாரம் அப்படியேஅடங்கிப்போயிற்று சூரியகந்தப்பகுதியில் மீட்கப்பட்ட சிங்கள எலும்புக்கூடு

(7ஆம் பக்கம் பார்க்க)

# தேதி குறிப்பிடச் சொல்வோம்

## -ஓர் அறிமுகம்

**வெளியீடு:**
**காயமுற்ற போராளிகள் பயிற்சிக் கல்லூரி**

தேதி குறிப்பிடச் சொல்வோம்.

சுதுமலை பயிற்சிப் பள்ளியைச் சேர்ந்த இளைஞர் இருவரின் கவிதை ஆக்கங்கள் 'தேதி குறிப்பிடச் சொல்வோம்' என்ற மகுடத்தில் நூல் வடிவமாகியுள்ளது.

ம. நர்மதன், ந. சுதன் ஆகிய இரு போராளிகளும் தமது உணர்வுகளை கவிதைகளாக படையல் செய்துள்ளனர்.

இன்று நம் சூழலில் புதிய பல படைப்பாளிகள் அறிமுகமாகி வருகின்றனர் என்பது கவனிக்கத்தக்கது.

விடுதலைப் போராட்டத்தில் முற்றாக இணைத்துக் கொண்டு நல்லதொரு படைப்பிலக்கிய வடிவத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர்.

அழகான அட்டையுடன் சமீபத்தில் வெளியாகியுள்ள இந்த கவிதை நூலில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய விதத்தில் சில நல்ல கவிதைகள் உள்ளன.

'வான் மீது முழக்கம்
வாசலிலோ
பிணங்களைத் தூக்க
சனப்புழக்கம்'

வான் அதிர்வின் ஊடாக செய்தி வருவதும், அச்செய்தி வேதனையை மனசில் ஏற்படுத்துவதும் இக் கவிதையில் சொல்லப்பட்டுள்ளது.

எதிரியால் கோழைத்தனமாக இந்த மாதிரியான அநியாயத்தைத் தான் செய்ய முடியும். இதை நாம் பார்த்துக் கொண்டு மௌனம் சாதிக்க முடியாது என்பதை இக்கவிதையின் கடைசி வரிகள் சொல்கின்றன.

சுப்பர் சொனிக்காம்
அது கெதியில் நொருங்கும்
என்ன தயக்கம்?

என்று இளங்கவிஞர் ந-சுதன் இக் கவிதையில் கேள்வியெழுப்புகிறார் - இக் கேள்வியில் என்ன தயக்கம்?' எனக் குறிப்பிடப்பட்டிருப்பது ஆராயத் தக்கது

இந்த இனத்தை நோக்கி இயல்பாய் கவிதை மனதில் எழும் கேள்வி இது

இதன் மூலம் போராடும் இனம் உறுதியாக - தெளிவாகச் செயல்பட வேண்டும்என்கிற கருத்து முன்வைக்கப் பட்டுள்ளது.

ம. நர்மதன் என்பவர் எழுதிய 'உணர்ந்தான்' என்ற கவிதை சிறப்பாக அமைந்துள்ளது.

சிறிய பெரிய கவிதைகளாக பல கவிதைகள் இந்த நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

'பள்ளம் மேடுபலவந்திடினும்
பாதிவழி நிற்பதில்லை
புலிகள்'

என்ற வரிகளைப்போல பல கவிதையடிகளில் விடுதலைக்கான திசை சொல்லப்பட்டுள்ளது. போராளிகளின், தலைவனின் உறுதி சொல்லப்பட்டுள்ளது.

போராளிகளின் கவிதைகள் இவை. இவற்றில் யதார்த்தம் மேலோங்கியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. வெறும் வார்த்தை அடுக்குகள், கோஷங்கள் இந்நூலில் இல்லை.

இப்புதிய - கவிஞர்கள் நிறைய படைப்பார்கள் என எதிர்பார்க்கலாம்.

**-அர்ச்சனா**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

# சந்திரிகாவிடம் ஆட்சியை கைமாற்றுதல்;

# ஐ. தே. கவுக்குள் நடந்த இறுதிநேர முயற்சி

தேர்தல் முடிவுகள் வெளியாகிக்கொண்டிருந்தன. தோல்வியை தார்மீக ரீதியில் ஏற்றுக் கொண்டு அடுத்த கட்டத்தைப் பற்றிய செயற்பாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு சாரார்; மறுபுறத்தில், சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது என்ற குறிக்கோளுடன் தோல்வியைத் தெரிந்து கொண்டும் ஆட்சியை தக்க வைத்துக் கொள்ளும் முயற்சிகளில், அதே கட்சியின் இன்னொரு சாரார்.

இந்த அரசியல் விளையாட்டில் பரஸ்பரம் எழுந்த போட்டிகள், கால் வாரல்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் உட்பூசல்களை தெளிவாக காட்டி நின்றன.

## திரைமறைவு முயற்சிகள்

ஆட்சியை ஐ. தே. கவே தொடர்ந்தும் வைத்துக் கொள்ள பலத்த முயற்சிகளை எடுத்த குழுவுக்கு காமினி திசாநாயக்கா தலைமை தாங்கினார்.

ஆட்சியமைப்பதற்கான பெரும்பான்மையைப் பெறுவதில், ஏனைய கட்சிகளுடன் ஒத்துழைப்பை நாடப்போவதாக கூறி, ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவையும் தன்னுடைய வலைக்குள் இழுத்துக் கொண்டார் காமினி திசாநாயக்கா.

ஜனாதிபதி, காமினியின் பேச்சை நம்பினார். அதன் பேறாக 'யார் தேர்தலில் வெற்றி பெற்றாலும் ஆட்சி அமைக்க வேண்டியவர்களை நானே அழைப்பேன்' என்றும் பகிரங்கமாகக் கருத்துக்களை வெளியிட்டும், அவசர கால சட்டத்தின் கீழ் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்தும், காமினி திசாநாயக்காவின் குழுவின் செயல்பாடுகளுக்கு அனுசரணையாளராக செயற்பட்டார்.

அத்துடன் அரசியலமைப்பின்படி பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்கும் கட்சியின் தலைவரையேதான் பாராளுமன்றத்தில் ஆட்சியை அமைக்கும்படி அழைப்பு விடுக்கப்போவதாகவும் இதற்கான முழுமையான அதிகாரம் அரசியல் அமைப்பு மூலம் தனக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் ஓர் மயக்கநிலையிலான கருத்தையும் வெளியிட்டார்.

இந்நிலையில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் நீலன் திருச்செல்வம், மு. சிவசிதம்பரம், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் த. சித்தார்த்தன், கரவை கந்தசாமி ஆகியோரிடம் காமினி திசாநாயக்கா ஆதரவு கோரினார் இவ் இரு கட்சிகள் உட்பட, யாழ்ப்பாண மாவட்டத்தில் சுயேட்சையாக போட்டியிட்ட ஈ.பி.டி.பி குழுவினரின் ஒத்துழைப்பையும் பெற்று, அதன்மூலம் ஐ. தே. க. ஆட்சி அமைக்க போதிய பலம் இருப்பதாகவும், எனவே தன்னிடம் ஆட்சிப் பொறுப்பை ஏற்க அழைப்பை விடுமாறும்காமினி திசாநாயக்கா ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தார் இதற்கு சொக்சியும் துணைபோனார்.

இதே வேளை ஜனாதிபதியின் விசேட பாவிப்பிலிருந்த உலங்கு வானூர்தி ஒன்றை அம்பாறைக்கு அனுப்பி முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப்பை கொழும்புக்கு அழைத்து வரும் முயற்சியில் தனது செயலாளர் கே. எச். ஜே. விஜேதாசா மற்றும் ருக்மன் சேனநாயக்கா மூலமும் ஜனாதிபதி ஈடுபட்டார்.

## ரணிலின் சீற்றம்

இவைகள் ஒரு புறம் நடந்து கொண்டிருக்க மறுபுறத்தில் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனாவை சந்தித்த ரணில் விக்கிரமசிங்கா தன்னிடம் இருந்த பிரதமர் பதவியை பறிப்பதற்கு காமினி திசாநாயக்கா சதி செய்வது பற்றி எடுத்துரைத்தார். டி. பி. விஜேதுங்காவும் காமினியும் மேற்கொள்ளும் திரை மறைவு முயற்சிகள் தொடர்பாக விரிவாக எடுத்துரைத்த ரணிலுக்கு சுசில் முனசிங்காவும், எம். எச். முகமட்டும் டிரோன் பெர்னாண்டோவும் உறுதுணையாக நின்றனர் இச் சந்திப்பு சுமார் இரண்டு மணி நேரத்திற்கு மேல் நீடித்தது. விருப்பத் தெரிவு வாக்குகளில் காமினி பின் தங்கியிருப்பதும் இங்கு எடுத்துக் காட்டப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, ஜனதிபதி மாளிகையில் ஐ. தே. க. சிரேஷ்ட உறுப்பினர்களுக்கான சந்திப்பு ஒன்று நடைபெற்றது. இச் சந்திப்பில் ஐ. தே. க. வில் நான்கு குழுக்கள் இருப்பது அரங்கத்திற்கு வந்தது காமினி திசாநாயக்காவை தலைமையாக கொண்ட ஒரு குழுவும். ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவை தலைமையாக கொண்ட ஒரு குழுவும் செயல்பட்டது. இவ் இரு குழுக்களும் ஒருவரை ஒருவர் புரிந்துணர்வின் அடிப்படையில் விட்டுக் கொடுத்து செயற்பட்டனர் என்றே கூறலாம். இவ் இரு குழுக்களுக்கும் எதிராக ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் குழு ஒன்று செயற்பட்டது. மிகவும் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் ரணில் விக்கிரம சிங்கா காணப்பட்டார். இக் குழுவினருக்கு மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் சக பாடிகளான மற்றொரு குழு ஒத்தாசையாக நடந்தது இக் குழு தமது கருத்தாக எதையும் பகிரங்கமாக வெளிப்படுத்தாத போதும், ரணில் விக்கிரம சிங்காவின் கருத்தையே இவர்கள் பலப்படுத்திக் கொண்டிருந்தனர். மிகுந்த சர்ச்சைகளுக்கு மத்தியில் நடைபெற்ற இக் கூட்டம் முடிவு எதுவும் எடுக்கப்படாமலேயே கலைந்தது

கூட்டம் கலைந்ததைத் தொடர்ந்து, ஜனாதிபதி டி.பி விஜேதுங்கா, செயலாளர் விஜேதாச சகிதம் உள்ளே செல்ல அவரை காமினி திசாநாயக்கா, சொக்சி, சரத் அமுனுகம ஆகியோர் பின் தொடர்ந்தனர் ரணிலும் சிறிசேன கூரேயும் சுசில் முனசிங்காவும் ஜனாதிபதியை சந்திக்க முனைந்த போதும் முயற்சி கை கூடவில்லை

ஆவேசமான உணர்ச்சியுடன் ஜனாதிபதி மாளிகையின் வாசல் வரை சென்ற ரணில் விக்கிரமசிங்காவை சமாதான படுத்த ஐக்கிய தேசிய கட்சி பொதுச்செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர பெரும் முயற்சி எடுத்தார். எனினும் எதையும் பொருட்படுத்தாமலேயே ரணில் வெளியேறிச் சென்றார்.

ரணில் விக்கிரமசிங்காவின் வெளியேற்றத்தை தொடர்ந்து அவரது குழுவும், பிரேமதாசாவின் சகபாடிகளும் ஒருவர்பின் ஒருவராக வெளியேறிச் சென்றனர். இதனை அவதானித்துக் கொண்டிருந்த ருக்மன் சேனநாயக்கா பொதுச்செயலாளர் காமினி விஜேசேகராவிடம் அவசரமாக எதையோ கூறிவிட்டு அவரும் வெளியேறினார்.

## சந்திரிகாவுடன் சந்திப்பு

இதனிடையே திருமதி சந்திரிகா குமாரணதுங்காவை சந்தித்த ரணில் விக்கிரமசிங்கா, தனக்கு எதிராக ஐ தே. கவில் எடுக்கப்படும் முயற்சிகள் தொடர்பாகவும், தொடர்ந்தும் ஆட்சியை நீடிப்பது தொடர்பாக மேற் கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளின் முழுமையான விபரத்தையும் தெரிவித்து, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பின் நிலையைத் தெரிந்துகொண்டு ஜனாதிபதியை சந்திக்கும்படி ஆலோசனை கூறினார்.

ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதி மாளிகையிலிருந்து வெளியேறும் முன்பாகவே, அலரி மாளிகையுடன் தொடர்பு கொண்டு இரண்டு மணித்தியாலத்தில் பத்திரிகையாளர் மகா நாட்டை கூட்டுவதற்கான ஏற்பாட்டை மேற்கொள்ளும்படி பணிப்புரை விடுத்திருந்தார். பத்திரிகையாளர்களுக்கான தேநீர் விருந்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதி மாளிகையிலிருந்து வெளியேறிய ரணில் விக்கிரமசிங்கா, சந்திரிகா குமாரணதுங்காவை றொஸ்மீட் பிளேசில் சந்தித்து விட்டு வாட்பிளேஸ் சென்று ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைச்சந்தித்தார் நடைபெற்றவைகளை விபரித்தார். ரணிலின்திட்டம் என்ன என்பது புரியாமல் டி. பி. விஜேதுங்காவும் காமினி திசாநாயக்காவும் குழம்பிக் கொண்டிருந்தனர். எனினும் காமினி தொடர்ந்தும் தனது முயற்சிகளை மேற் கொண்டார். தேர்தலில் ஆசனங்களைப்பெற்ற சகலரிடமும் அநேகமாக பிரதமர்பதவி தனக்கு கிடைக்கும் எனவும் ஆதரவு நல்கும் படியும் தொலைபேசி மூலம் கேட்டுக் கொண்டு இருந்த காமினி திசாநாயக்க பிறகட்சிகளுடன் பேரம் பேசுதல்களையும் மேற் கொண்டார். மிகவும்முக்கிய அமைச்சுப்பதவிகள் தரப்படலாம் என்றும் ஆசை காட்டினார் தமிழ் குழுக்களுக்கு தற்போது செயற்படுவதைபோல தொடர்ந்தும் செயற்படலாமென உத்தரவாதம் கூறினார் ஆனால் கட்சிகளோ உடனடியாக முடிவைதெரிவிக்கதயக்கம்காட்டின. கால அவகாசம் கோரின ஆனால் இந்தநேரத்தில் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகையில் பத்திரிகையாளர் மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

**நிமலராஜன்**

## பத்திரிகையாளர் மாநாடு

தேர்தல் தொடர்பாக என்ன கூற விரும்புகிறீர்கள்? அடுத்த பிரதமர் நீங்களா? காமினியா? என்ற கேள்வியை பத்திரிகையாளர் கேட்ட போது மிக அடக்கமாகப்பதிலளித்தரணில் "அடுத்தது நானும் இல்லை காமினியும் இலலை, ஏனெனில் மக்களில் பெரும்பான்மையினர் எமது கட்சியை நிராகரித்து விட்டனர் என்பது தேர்தல் முடிவுகள் மூலம் தெரியவருகிறது. எனவே மக்களின் தீர்ப்புக்கு தலை வணங்கும் அதே வேளை ஐ. தே. க.வை புனர் நிர்மாணம்செய்ய வேண்டும் இதன்மூலமே எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் தேர்தல்களில் ஐ தே-க வெற்றி பெறும்'' என தெரிவித்தார்,

இதனைக் கேட்ட பத்திரிகையாளர்கள் திகைப்படைந்தனர். ஏனெனில் காமினி திசநாயக்கா ஆட்சிஅமைக்கப் போதிய பலம் இருப்பதாகக் கூறி 45நிமிடங்களே ஆகியிருந்தநிலையில், ரணிலின் இக் கூற்று அவர்களுக்கு தூக்கி வாரிப்போட்டது போலிருந்தது.

தொடர்ந்து கருத்து தெரிவித்த ரணில் விக்கிரமசிங்கா ஐக்கிய தேசியக் கட்சி, பொது ஜன ஐக்கியமுன்னணிக்கு ஓர் சிறந்த எதிர்க்கட்சியாக இருக்கும் என்றும் இது எதிர்காலத்தில் ஏனைய எதிர்க்கட்சிகளுக்கு ஓர் முன்னோடிநடவடிக்கையாக அமையும் என்றும் தான், தனது பாராளுமன்ற வாழ்க்கையில் ஒரு போதும் எதிர்கட்சி ஆசனத்தில் அமர்ந்தது கிடையாது என்றும் எனவே ஒரு தடவை இருந்து பார்க்கப் போவதாகவும் தெரிவித்தார்.

பிரதமராக தான் சென்ற ஆட்சியிலே இருந்தமையினால் இவ் ஆட்சிமாற்றத்திலேதன்னிடம்எதிர்க்கட்சிதலைமைஇருப்பது தானே பாராளுமன்ற மரபு எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

மேலும் உங்கள் முன்னிலையிலே தான் அலரிமாளிகையை விட்டு வெளியேறப் போவதாகவும் எனவே தன்னால் அளிக்கப்படும் தேநீர் விருந்தில் கலந்து கொள்ளுமாறும் தனக்கு முன்னர் அளித்த உதவிகளுக்கு நன்றி தெரிவித்து தான் விடை பெற்றுக் கொள்வதாகவும் தெரிவித்தார். தேநீர் விருந்தின் பின்னர் பத்திரிகையாளர்அலரி மாளிகையில் வெளியே நிற்க தனது கையை அசைத்தபடி காரில் ஏறி விடை பெற்றார்.

7 ஆம் பக்கம் பார்க்க)

# 'எனது ஜனாதிபதி ஆண்டுகள்'

# சர்ச்சை கிளப்பிய வெங்கட்ராமன்

வெண்ணிற மேலங்கியும், பதக்கங்கள் குத்தப்பட்டிருந்த பகட்டான உடையலங்காரத்துடன் சூழநிற்கும் அதிகாரிகள், இரத்தச்சிவப்பு சிம்மாசனத்தில், தங்க நிற வேலைப்பாடுகளுடன் கூடிய அந்த ஆசனம், அதிலே கம்பீரமாக உட்கார்ந்திருக்கும் இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி ஆர். வெங்கட்

டும் களத்துக்கு வந்துள்ளது.

## 74இல் காலாவதியான காவிரி நீர் பங்கீட்டு ஒப்பந்தம்

வெங்கட்ராமனின் நூல் கிளப்பிய 3-வது பிரச்சினை தமிழ்நாடு முழுவதையும் அவருக்கெதிராக கிளர்ந்தெழ வைப்பதாக இருந்தது. முதலிரு சர்ச்சைகளிலும், வெங்கட்ராமன் கூறியது உண்

வெளியாகியுள்ள தகவலால் தற்போது எழுந்துள்ள சர்ச்சை, 91-ல் கலைக்கப்பட்ட கருணாநிதியின் ஆட்சி பற்றிய நியாயம் கற்பிப்பு ஆகும்.

காங்கிரஸ் கட்சியின் தமிழ் நாட்டுத் தலைவர் வலியுறுத்தினார். அ தி மு. க தலைவர் ஜெபலலிதா தி. மு. க ஆட்சியைக் கலைக்குமாறு வற்பு

ரமாக உட்கார்ந்திருக்கும் இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன், இவ்வாறான அட்டைப்படத்தை தாங்கி அறுநூற்றி ஐம்பத்து நான்கு பக்கங்களுடன் வெளிவந்த அழகான நூல். இன்று இந்தியா பூராவும் மிகப் பிரபலமான விளம்பரத்தை தேடிக்கொண்டிருக்கிறது.

தன்னுடைய ஜனாதிபதி பதவிக்காலத்தில், பன்னிரண்டு நாட் குறிப்புகளில் குறித்து வைத்த தகவல்களை 'என்னுடையஜனாதிபதிஆண்டுகள்' (**My Presidential years**) - என்ற தலைப்பில் நினைவுகளாக வெளியிட்டு வைத்திருக்கிறார் வெங்கட்ராமன்.

இந்தநூலில்,குறிப்பிடப்பட்டுள்ள நான்கு முக்கிய விடயங்கள் அரசியல் ரீதியில், பின்னணியிலிருந்தவற்றை, வெளிக்கொண்டுவந்திருக்கின்றன இந்த விடயங்களில் வெங்கட்ராமன் நேரடியாக சம்பந்தப்பட்டிருப்பதால், அவர் தனது கோணத்தில் அவற்றை ஆராய்ந்திருப்பதும் சர்ச்சையை கிளப்ப தூண்டுகோலாகியிருக்கிறது.

அவருடைய பதவிக்காலத்தில் பிரதமராகவிருந்த ராஜீவ் காந்தியைப் பற்றிய அவரது விமர்சனங்களும், பிரதமர் பதவியிலிருந்து ராஜீவை நீக்க முயற்சித்த காங்கிரஸ் கட்சி உட்பூசலும், காவிரிநீர் பங்கீடு பற்றிய அவரது எண்ணங்களும், தமிழ் நாட்டில் கருணாநிதியின் ஆட்சியைக் கலைப்பதற்கு அவர் காட்டிய நியாயங்களும், இந்த நூலின் சர்ச்சைக்குரிய பகுதிகளாக இனங்காணப்பட்டுள்ளன.

## நாடாளுமன்ற அனுபவமற்ற ராஜீவ்

ராஜீவ்காந்தி,நாடாளுமன்ற அனுபவமற்றவர், சபையில் விவாதங்களில் நேரடியாக இறங்க அஞ்சுபவர் என்றவாறானகருத்துக்கள்மூலமாக,பிரதமர் பதவியில் இருக்க ராஜீவ் இலாயக்கற்றவர் என்பதை நிலைநிறுத்த முயற்சிப்பவராக வெங்கட்ராமன் காணப்படுகின்றார்.

ராஜீவ் நாடாளுமன்ற மரபுகளைப்பற்றி சட்டை செய்யாதவராக இருந்தார் என வெங்கட்ராமன் சொல்வதில் உண்மையுண்டு என்பதை ராஜீவின் பிரதமர் கால நாட்கள் காட்டுகின்றன, சபைக்கு வந்து உறுப்பினர்களை நேரடியாக சந்திப்பதில் ஆரம்ப காலங்களில் ஆர்வம் காட்டிய ராஜீவ், போர்பர்ஸ் ஊழல் பற்றிய பிரச்சினைகள் அவரைத் தாக்கத் தொடங்கியவுடன் சபைக்கு வருகை தருவதையே குறைத்துக் கொண்டார்.

அரசியல் எதிரிகளை, பழிவாங்கும் களமாக நாடாளுமன்றத்தையும் அவர் கருதியதாக எதிர்க்கட்சிகள்பலமுறை ராஜீவை குற்றஞ்சாட்டியுள்ளன. அடிப்படையான அரசியல் ஆர்வம் இல்லாத ராஜீவ், தனது பாடசாலை நண்பர்களின் ஆலோசனையையே, பிரதமராக பதவியேற்ற ஆரம்பகாலத்தில் பெரிதாக எண்ணிக்கொண்டார் என இந்தியப்பத்திரிகைகள் பலவும் குற்றம் சுமத்தியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ராஜீவைப்பற்றிய, இந்த விமர்சனம், தான் ஒரு தந்தையின் ஸ்தானத்திலிருந்து வழங்கியதாக நூலில் வெங்கட்ராமன் பின்னர் கூறிக்கொண்டார். ராஜீவ் நலிந்த வகுப்பு மக்களின் முன்னேற்றத்தில் நாட்டம் கொண்டிருந்தார். அசாம் மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் அமைதி திரும்ப அவர் எடுத்த முயற்சிகள் பற்றியும் தான் நூலில் கூறியிருப்பதை யாரும் கண்டு கொள்ளவில்லையா என வெங்கட்ராமன் கேட்டிருக்கிறார்.

சம்பிரதாயங்களின்படி, நாட்டு விவகாரங்களை, பிரதமர் பதவியிலிருப்பவர், ஜனாதிபதி மாளிகைக்கு சென்று ஜனாதிபதியிடம்தெரிவிக்க வேண்டும் என்பது இந்திய மரபு. ஆனால் ராஜீவ் இதை எவ்வளவு தூரம் கடைப்பிடித்தார் எனவும் தனது நூலில் ஆதங்கப்பட்டிருக்கிறார் வெங்கடராமன்.

வளர்த்துவிட்ட நேரு குடும்பத்தையே எட்டி உதைக்கிறார் வெங்கட்ராமன். நூலில் பல இடங்களில் ராஜீவை புகழ்ந்தாலும், ராஜீவ் நாடாளுமன்ற அனுபவமற்றவர் எனக் கூறுவதன் மூலம் ஒரு குடம்பாலில் ஒரு துளி விஷம் கலந்தது போலிருக்கிறது என்கிறார், இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர்.

ராஜீவ் காந்தியை பிரதமர் பதவிக்கு திறமையற்றவர் எனக் கூறும் வெங்கட்ராமன், அவரது பதவிக்காலத்தில் சந்தித்த மற்றைய பிரதமர்களான வி பி. சிங்கையும, சந்திரசேகரையும் நல்ல திறமைசாலிகள் எனவும், நாடாளுமன்றத்தில், போதிய பெரும்பான்மை பெற்றிருந்தால், அவர்கள் உறுதியான ஆட்சியை வழங்கியிருப்பார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

சந்திரசேகரை சிறந்த காந்தீயவாதி என்றும், அவரது அணுகுமுறைகள் தனக்குப்பிடித்தமானவை என்றும் வெங்கட்ராமன் தனது நூலில் குறிப்பிட்டிருப்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல் காங்கிரஸ்காரர்களுக்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது.

மூத்த இந்திரா காங்கிரஸ் உறுப்பினரான வெங்ட்ராகமன், தான் சார்ந்திருந்த கட்சியையே காட்டிக் கொடுப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்,

## பிரதமர் பதவியிலிருந்து ராஜீவை நீக்க சதி

வெங்கட்ராமனின் நூலில், சர்ச்சையைக் கிளப்பியுள்ள இரண்டாவது பிரச்சினை, 87இல் ராஜீவ் காந்தியை பிரதமர் பதவியிலிருந்து நீக்க, துணை ஜனாதிபதியாயிருந்த தன்னிடம் உதவி கோரப்பட்டதாக நூலில் குறிப்பிட்டதாகும்.

ராஜீவுக்கு எதிராக, 240 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் திரட்டி வைத்திருந்த மூத்த காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், அன்றைய ஜனாதிபதி சியானி ஜெல்சிங்குக் கூடாக தொடர்பு கொண்டு, தன்னை பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்ள வற்புறுத்தியதாகவும் இந்நூலில் வெட்கட்ராமன் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், மேற்குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் யாரென வெங்கட்ராமன் அடையாளம் காட்டவில்லை. எனினும், வெங்கட்ராமனின் நூலின் முக்கிய பகுதிகளை வெளியிட தேர்ந்தெடுக்கப்பட்ட பிரபல பத்திரிகையொன்றின் துணை ஆசிரியரான கே.கே. பட்டியால் என்பவர் வி.சி. சுக்லாவே, ராஜீவுக்கு எதிரான முயற்சிகளில் இறங்கியவர் எனத் தெரிவித்துள்ளார்.

இதை வி சி. சுக்லா மறுத்தாலும், அன்றைய ராஜீவ் அமைச்சரவையில் பாதுகாப்பு அமைச்சராயிருந்த வி.பி.சிங் நீஸ்கன் பிரதமர் பதவியை ஒப்புக்கொண்டால் கியாணி ஜெல்சிங், ராஜீவை பதவி நீக்கத் தயாராயிருப்பதாக, தன்னிடம் சுக்லா தனிப்பட கூறினார் என தெரிவித்தார் இப்படியான வேண்டுகோள் சுக்லாவிடமிருந்து தனக்கும் விடுக்கப்பட்டதாக அருண் நேருவும் தெரிவித்துள்ளார்.

இது பற்றி உடனடியாக ராஜீவின் கவனத்துக்கு கொண்டு வந்ததாகவும் இவர்கள் இருவரும் கூறியுள்ளனர். இதுபோலவே. முன்னாள் சட்ட அமைச்சர் அஷோக் சென்னும்சுக்லாவுடன் இணைந்து செயற்பட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார்.

ராஜீவை பிரதமர் பதவியிலிருந்து நீக்க அன்றைய ஜனாதிபதி கியாணி ஜெல்சிங் பலமுறை முயன்றது வெளிப்படையானது. 86ஆம் ஆண்டில், சிறிநகரில் தங்கியிருந்த அருண்நேருவும், உங்களையே நேருகுடும்பத்தின் வாரிசாக ஏற்றுக்கொள்வேன் ராஜிவை ஏற்றுக்கொள்ளமுடியாது என ஜெல்சிங் ஒருமுறை கூறியிருக்கிறார்.

87இல் ஜெல்சிங் - ராஜீவ் புகைச்சல் உச்சத்துக்கு வந்தது. ஜெல்சிங் ஜனாதிபதி பதவிக்கு வந்தது ஏற்றுக் கொள்ள முடியாதது என்ற கருத்தை ராஜீவ் கொண்டிருந்தார்.

இதற்கு ஓர் உதாரணமாக ராஷ்ரபதி பவனில், ஜனாதிபதி ஜெல்சிங் தீவிரவாதிகளுக்கு புகலிடம் தருவதாக ராஜீவ் அமைச்சரவையிலிருந்த கே. கே. திவாரி குற்றஞ் சாட்டினார். நாடாளுமன்றத்தின்பலத்த எதிர்ப்பினால் அமைச்சரவையிலிருந்து திவாரியை நீக்கினாலும், ஜெல்சிங் பதவிக்காலம் முடிந்து உடனேயே திவாரிக்கு மீண்டும் அமைச்சரவையில் இடமளிக்கப்பட்டமையானது ஜெல்சிங்கின் முகத்தில் கரி பூசுவதாக இருந்தது.

இப்பிரச்சினை, வெங்கட்ராமனின் நூல் மூலம் மீண்டும் சர்ச்சைகளிலும், வெங்கட்ராமன் கூறியது உண்மையாகஇருந்தாலும், காவிரி நீர் பங்கீடு பற்றிய அவரது கருத்து பிரச்சினை பற்றிய போதிய அறிவின்றி அவர் அளித்த விமர்சனமாக இருந்ததென தமிழ்நாட்டு பத்திரிகைகள் குரல் எழுப்பின.

ஆனால், தன்னுடைய பிழையை ஒத்துக்கொண்டதனால் ஓரளவு இப்பிரச்சினை வேகம் தணிந்திருக்கிறது. அவர் தனது நூலில் குறிப்பிட்டதன்படி, 1924இல் கையெழுத்தான காவிரி நீர் பங்கீடு பற்றிய ஒப்பந்தம் சரியாக 50 வருடங்களின்பின் 1974இல் காலாவதியானதாக அவர் தெரிவித்திருந்தார். எதிர்ப்புக் கிளம்பியதும் அவ்வாறு கர்நாடக அரசே கூறியதாக தனது அடுத்த பதிப்பில் திருத்தம் வெளியிடப்போவதாக அறிவித்து பிரச்சினையின் தீவ்ரத்தை தணித்துள்ளார்.

## ரகுராம்

காவிரி நீர் பங்கீட்டு பற்றிய சரியான தகவல்களின்படி, 15 சரத்துக்கள் உள்ள இவ் ஒப்பந்தத்தில், 4-வது பிரிவு தொடக்கம் 8-வது பிரிவு வரை உள்ள சரத்துக்களின் கருத்தின்படி, இரு மாநில அரசுகளும் மேற்கொள்ளும் திருத்தங்களின் அடிப்படையில் முடிவு செய்து கொள்ளலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதே ஒழிய, 50 வருட ஒப்பந்தம் என காட்டப்படவில்லை என தெரிய வந்துள்ளதும், வெங்கட்ராமன், பிரச்சினையை அறியாமல் வெளியிட்ட தவறான தகவலை சுட்டி நிற்கின்றது.

## கருணாநிதி ஆட்சிக் கலைப்பு தவறான நியாயங்கள்

வெங்கட்ராமனின் நூலில், ஜெயலலிதா தி. மு. க ஆட்சியைக் கலைக்குமாறு வற்புறுத்தினார். இப்படியெல்லாம் வற்புறுத்தல்கள் வந்து கொண்டு இருந்த நேரத்தில், பிரதமர் சந்திரசேகர் தி. மு. க. ஆட்சியைக் கலைக்க உத்தரவிடுமாறு கேட்டார். நான் தயங்கினேன்.

பின்பு கவர்னர் பர்னாலாவிடம் ஆட்சி பற்றிய அறிக்கை கேட்கப்பட்ட போது, அவரும் மறுத்து விட்டார்.

எனினும். மத்திய அமைச்சரவையின் தீர்மானத்துக்கமையவே தமிழ்நாட்டில் கருணாநிதி ஆட்சியைக் கலைக்க உத்தரவிட்டேன் என சப்பைக் கட்டு கட்டியுள்ளார்.

இகற்கு தன்னிடம் அதிகாரமில்லை என்பதை சுட்டிக் காட்டுவதன் மூலம் நியாயம் தேடியுள்ளார். நாடாளுமன்ற ஜனநாயகத்தின் ஜனாதிபதியாகி, அரசியல் சாசனப்படி நடப்பது மிகவும் கடினம், ஜனாதிபதியிடம் விவேகமிருக்கலாம், ஆனால் அதிகாரமில்லை என தனது நூலிலேயே பல முறை கூறியிருக்கிறார்.

இதற்குப் பதிலளித்துள்ள கருணாநிதியோ, வெங்கட்ராமன் இப்படியெல்லாம் சுற்றிவளைத்து தி. மு க. ஆட்சியைக் கலைத்ததற்கு காரணம் சொல்ல வேண்டாம் சூத்திர ஆட்சி ஆகவே கலைத்தேன் எனச் சுருக்கமாக சொல்லி விடுங்கள். அப்போதாவது தமிழனுக்குச் சூடு வராதா? சொரணை வராதா? என உணர்ச்சிவசப்பட்டு பொரிந்து தள்ளியுள்ளார்.

முடிவாக, வெங்கட்ராமன் எவற்றை நினைத்து நூலை எழுதினாரோ தெரியாது விடினும், எழுத்து உரிமையும், கருத்து வெளியிடும் உரிமையும் உள்ளதாக கூறப்படும் ஒரு நாட்டில், ஒரு முன்னாள் ஜனாதிபதிக்கு இப்படியும்ஒரு நெருக்கடி.

## போட்டோ அல்பம் இனாம்

★ கலர் பிலிம் சுருள்களை கழுவி படமாக்கி 30 பிரதிகள் பெற்றால் ஒரு போட்டோ அல்பம் இனாம்

★ கொம்யூட்டர் றபர்சில் [COMPUTER RUBBER STAMPS] (இரண்டு வருட உத்தரவாதம்)

★ லயின், காவ்ரோன், கலர் புளொக்ஸ் (Line, Half Tone, Colour Blocks)

★ புகைப்பட பிரதியாக்கம் [RE - COPY] மேல் குறிப்பிட்டவற்றைக் குறைந்த செலவில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# ★ கொழும்பு கலைக்கூடம் ★

(கொழும்பு ஸ்ருடியோ)

55, லெப். இளங்கோ வீதி, யாழ்ப்பாணம்

தொழில் நுட்பத்தில் 35 வருடங்கள் அனுபவம் பெற்றவர்கள்

(சி-10134)


## தானம்

போக வேண்டியதுதான், அம்மாவிட்ட மூச்சும் விடாட்டால் சரிதானே.

அப்பாடா ...நெஞ்சில் சந்தோசம் எழுந்தது அவனுக்கு

★ ★

வல்லை வெளியில் எதிர்க்காற்று அவனை விரட்டித் தள்ளியது.அம்புலன்ஸ் வண்டியொன்று வலு வேகமாக அவனைக் கடந்தது. இண்டைக்கும் நேவி அடிக்கிறான் போலகிடக்கு: யோசனையுடன் சைக்கிளை ஓடத் தொடங்கினான்.

கிரீச்... மோட்டார் சைக்கிளொன்று அவனுக்கருகில் நின்றது தமையன் அதிலிருந்து பரபரக்க இறங்குவதைக் கண்டவன், சைக்கிளை நிறுத்தி, எண்னண்ணை? என்றான் இண்டைக்கு இரத்தம் குடுத்தது. அதுக்கிடையில தெரிஞ்சு போச்சோ... அவனது எண்ணம் ஆடியது.

தம்பி கண்போட் செல்லொன்று வீட்டில விழுந்து,அம்மாவுக்கு சரியான காயம், இரத்தம் கணக்கப் போட்டுது. அம்புலன்ஸ்சில கொண்டு போறாங்கள்,நான்கொஸ்பிட்டலுக்கு போறன் நீயும் வா...... என்று அவனது பதிலையும் எதிர்பாராமல் வேகமெடுத்து போகத் தொடங்கினான்.

ஐயோ அம்மாவுக்கு...... நெஞ்சு முழுதும் பதற அவனது சைக்கிள் யாழ்ப்பாணத்துக்கு திரும்பியது.

★ ★

கொஸ்பிட்டல், வாசலில் நின்றவரிடம் விஷயத்தைக் கூறிவிட்டு, உள்ளே பதற்றத்தோடு நுழைந்தான்; ஓரமாக நின்ற தமையனைக் கண்டு, ''அம்மா எங்க...... அழுகை கன்னத்தில் வழிந்தது; எமஜென்சி வோட்டில, தமையனும் அழத் தொடங்னான்.

தம்பி ஏன் இப்பவும் நிக்கிறீர்? நீர் காலம்பிற குடுத்த பிளட்டுக்கு உடனேயே உதவுகிறதுக்குசான்ஸ் வந்திட்டுது. காலையில் இரத்த வங்கியில் நின்ற தாதி ஒருவர் அருகில் வந்தபடி கூறினார்'

அவன் நிமிர்ந்துபார்த்தான் வடமராட்சியில கண்போர்ட் அடிச்சு காயப்பட்டு வந்த மனிசி ஒராளுக்கும் உம்மட பிளட்குரூப்தான் அவவுக்குத்தான் உம்மட பிளட் ஏத்துப்படுது. ஆளுக்கு பிரச்சினையில்லை, தப்பியிடும் தாதி தொடர்ந்தார்

அவனது பார்வை, தமையனிடம் போனது. தமையனது கை, அவனது கையை இறுகப் பிடித்துக் கொண்டது அவனது கைப்பிடி, தம்பியை விளங்கிக் கொண்டதை எடுத்துக் காட்டியது.

## மேற்குலக

தொடங்கி விட்டனர் பொசுனியஇராணுவத்தின் (இதில் முசுலிம்கள் குரோசியர் சில சேர்பியரும் உள்ளனர்) தளபதிஅண்மையில்இவ்வாறுதான் கூறினார் ''எமது தலைவிதியைநாமேதான் தீர்மானிக்க வேண்டும் என்பதே நாம் இப்போது உணர்ந்த பாடம். எனவே கொடுமைக்குள்ளாக்கப்பட்ட பொசுனிய மக்கள் தமக்கானசரியான பாதையை தெரிந்துவிட்டனர் என்பதே இதன்பொருள்.


நல்லூரில்

## தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனக் கண்காட்சி.

வாருங்கள், பாருங்கள், ஆதரவு தாருங்கள்

சவர்க்கார உற்பத்தி முன்னோடி

மில்க்வைற் நிறுவனத்தின் காட்சிச்சாலை தங்கள் நல்வரவுக்குக் காத்திருக்கிறது.

(சி 10171)



# பற்றீஷன் தொழிற் பயிற்சி நிறுவனங்கள்

# PATRICIAN INSTITUTES

தொழில்நுட்ப பயிற்சிநெறிகள் புதிய பிரிவுகள்
வார இறுதிநாள் வகுப்புக்கள்: 03-09-1994 சனிக்கிழமையும்,
வாரநாள் வகுப்புக்கள்: 05-09-1994 திங்கட்கிழமையும் ஆரம்பமாகின்றன.

### 1. COMPUTER PROCESSING: COURSES

1) Programming in BASIC Language (GWBASIC Including Advanced BASIC) and MS - DOS.
★ Duration ; 4 months

2) Word Processing (Word star Professional Rel S.O) and MS - DOS)
★ Duration ; 4 months

3) LOTUS 1-2-3 (Spread Sheet Analysis) and MS- DOS
★ Duration : 3 months

4) d BASE III PLUS and MS-DOS
★ Duration : 4 months

Equipment Used : LASER XT/2, XT/3, 386 and Bitcom Computers

(IBM Compatibles) (Theory and Practicals) (A / L 94) மாணவர்களின் நன்மை கருதி A/L பரீட்சை பெறுபேறுகள் வெளிவர முன் மேற்படி பயிற்சி நெறியைப் பயில ஏற்றவகையில் குறுகிய காலப்

6) TOEFL (Test of English as a Foreign Language)
★ Duration : 4 Months

7) SHORT HAND AND TYPING (English)
சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (ஆங்கிலம்)
(London, Pitman பரீட்சைகள் உட்பட சகல பரீட்சைகளுக்கும் ஏற்ற வகையில்)

8) GENERAL MOTOR MECHANISM - மோட்டார் வாகனங்கள் திருத்துதல் (Petrol & Diesel)
மோட்டார் சைக்கிள்கள், நீர் இறைக்கும் பம்பி, ஜெனரேற்றர், கார். லொறி என்ஜின்கள் (பெற்றோல், டீசல் யாவும்) அத்துடன் மோட்டார் வாகனங்களின் மின் உபகரணங்களைப் பழுது பார்த்தலும், மின்னேற்றலும், மின்சார இணைப்பும்.
★ Duration ; 6 Months


## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
2-08-1972

வீரச்சாவு:
26-08-1993

26-08-1993 அன்று கிளாலிக் கடலில் சிறிலங்கா கடற்படையுடன் ஏற்பட்ட நேரடி மோதலின் போது வீரச்சாவடைந்த

### கடற்புலி லெப். பூபாலன்

(சுந்தரராஜ் பாஸ்கர்)

நாகர்கோவில் கிழக்கு

தாயகத்தின் விடிவுக்காய்
பூத்து வந்த மலரே! - உன்
தாகம் தணிப்பதற்கே
காத்துக் கிடக்கின்றோம்.

பி. குறிப்பு: 26-08-1994 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் ஞாபகார்த்த நினைவஞ்சலி நிகழ்வு நடைபெறும் இந்நிகழ்வில் சக போராளிகளும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மாணவர்களின் நன்மை கருதி A/L பரீட்சை பெறுபேறுகள் வெளிவர
முன் மேற்படி பயிற்சி நெறியைப் பயில ஏற்றவகையில் குறுகிய காலப்
[2 மாதம்] பயிற்சியும் நடைபெறும்)
(கூடிய நேரச் செய்முறைப் பயிற்சிகள் வழங்கப்படும்)

2) **CIVIL DRAUGHTSMANSHIP AND QUANTITY SURVEYING**

★ Qualification : G. C. E (O/L) ★ Duration : 6 months

3) **CiTY AND GUILDS OF LONDON EXAM (Year 95/96)**

★ QUANTITY SURVEYING PART (I, II & III)

★ Qualification : G. C. E. (O/L) Duration : 9 months

4) **BOOK KEEPING and ACCOUNTS**

Duration : 6 months Week end classes Only
லண்டன் பரீட்சைகள் உட்பட சகல பரீட்சைகளுக்கும் ஏற்ற வகையில் கூடிய தமிழ் விளக்கங்களுடன் பயிற்சியளிக்கப்படும்.

5] **ENGLISH CLASS**

இலக்கணத்துடன் க. பொ. த. (சா/த) மற்றும் சகல பரீட்சைகளுக்கும் ஏற்ற வகையில் பயிற்சி நெறிகள் நடைபெறும்.
Duration : 4 — 6 Months
(மாணவரின் தகுதியைப் பொறுத்து)

★ Duration ; 6 Months

9] **ELECTRICAL WIRING** மின்சாரஇணைப்பு

★ வீட்டு மின்சார இணைப்பு ★ தொழிற்சாலை மின்சார இணைப்பு (Single Phase & Three Phase)

★ Duration : 3 Months

10) **MOTOR REWINDING** - மோட்டார் ரீவைண்டிங்

★ அடிப்படை மின்னியல், காந்தவியல், ஆமச்சர், மின்மாற்றிகள், Single Phase Motor and Fan, Three Phase.
★ Duration ; 4 Months

11) **GENERAL ELECTRICIAN** - ஜெனரல் எலெக்ரீஷன்

★ அடிப்படை மின்னியல் (AC/DC), அடிப்படை இலத்திரனியல்

★ நேரோட்ட, ஆடலோட்ட மின் இயந்திரங்கள் (Repair & Rewinding)

★ வீட்டு மின்சுற்று, வாகனங்களுக்கான மின்சுற்று

★ THREE PHASE (மோட்டர், மின் பிறப்பாக்கிகள்) மற்றும் சகலவிதமான (குளிர் சாதனப் பெட்டி, காற்றுச் சீராக்கி AC) மின்சார உபகரணங்களைப் பற்றி அறிதலும், அவற்றை பழுதுபார்த்தலும்.

★ Duration ; 6 Months

குறிப்பு:- ★ பயிற்சிக் கட்டணங்களை தவணை அடிப்படையில் செலுத்தலாம்.

★ வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் போதிய ஆதாரம் காட்டி பங்குக்குருவானவரின் [Parish Priest] சிபார்சின் பேரில் கட்டணத்தில் சலுகையை பெற்றுக்கொள்ளலாம்

★ எமது நிறுவனத்தில் பயின்ற மாணவர்களிடமிருந்து. [N.A.B] பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

★ மேற்படி பயிற்சி நெறிகளைப் பயில விரும்புவோர் விண்ணப்பப் படிவத்தை அலுவலகத்தில் பெற்று உடன் பதிவுசெய்து கொள்ளவும்.

## மேலதிக விபரங்களுக்கு:

பதிவாளர்,
**பற்றீஷன் உயர்கல்வி நிறுவனம்,**
59, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

Registrar,
**PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES**
59, St. Patrick's Road, Jaffna.

(சி-10167)

---

புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மு. சுந்தரராஜ் (பாபு)
குடும்பத்தினர்.

(9185)

---

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
1974-11-14

வீரச்சாவு
1993 08-2₁

## கடற்புலி 2-ம் லெப்.சுரேந்திரன்
(சபாரெத்தினம் சிவாகரன்)
திருமலை

மக்களின் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த போது கிளாலியில் வீரச்சாவடைந்தார்.

தென் தமிழீழத்தின் திருமலை ஊர்தனிலே
பைந்தமிழ்ச் செல்வன் சிவாகரன் உதித்திட்டான்
நல்ல வீரனாய் விவேகியாய் வரிப்புலியாய்
புறப்பட்டான்
ஆண்ட பரம்பரை அன்னியனுக்கு அடிமைப்படுவதா
வேண்டாம் அடிமை விலங்கினை அறுத்தெறிவேன்
என்று
நெஞ்சிலே வீரமும் களத்திலே ஆயுதமும் ஏந்தி
சொந்த மண்ணினை மீட்டிட புறப்பட்டான்.

உன்பிரிவால் துயருறும்
சகோதரர்கள்

க. பாலசுப்பிரமணியம்
889, திலகண்ணச்சி,
வீ/திட்டம், கைவேலி,
புதுக்குடியிருப்பு.

(9197)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# இனப்பிரச்சினை தீர்விற்குப் புதிய அரசாங்கம் சிங்கள மக்களிடம் பெற்ற அங்கீகாரம் என்ன?

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது குறித்து புதிய அரசாங்கம் வெளியிடும் அறிவிப்புக்கள் தமிழ் மக்களுக்கு ஓரளவிற்கு நம்பிக்கை ஊட்டுபவையாகவே உள்ளன. 17 வருட ஆட்சியின் பின்னர் பிரதமர்பதவியை ஏற்ற சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கா 'வடக்கு கிழக்கில் நிகழ்ந்து கொண்டிருக்கும் பிரச்சினையை அரசியல் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வைப்பதற்காக எம்மால் இயன்றவரை உழைப்போம்' என தனது முதலாவது பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

இதனை வலியுறுத்துமாப் போன்றே தனது பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்ட பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரான கேணல் அனுருத்த ரத்வத்தவும் பத்திரிகையாளரிடம் பேசினார் 'எமது அரசாங்கத்தின் முதல் நடவடிக்கையாகஇருப்பதுவடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தத்திற்கு ஒரு தீர்வைக் காண்பதாகும். இதற்காக நாம்எதையும் செய்யத் தயாராக இருக்கின்றோம்' என அவர் கூறினார்.

அத்தோடு இவ்விடயத்தில் புதிய அரசாங்கம் முன்னேற்றகரமான நடவடிக்கைகள் சிலவற்றையும் மேற்கொண்டுவருகின்றதென்பதை ஊர்ஜிதப்படுத்தும் நோக்கில் 'யாழ். குடாநாட்டின் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையும் நீக்கப்படுவது தொடர்பாக சகல பாதுகாப்பு அதிகாரிகளுடனும் விரிவான பேச்சுவார்த்தை நடத்தியதாகவும்' தெரிவித்திருந்தார்.

இந்த வகையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு நோக்கி ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளதயாராகி வருவதாக வெளிப்படுத்தி நிற்கும் புதிய பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம், இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதற்கு சிங்கள மக்கள் தேர்தலின் மூலம் தமக்கு அங்கீகாரம் அளித்துள்ளதாகவும் தெரிவிக்கின்றது. ஆனால் இது குறித்து அரசியல் விமர்சகர்களில் ஒரு பகுதியினர் முரண்படாமலும் இல்லை.

## சிங்களவர் ஆதரவு

பொதுவாகவே, நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் சிங்களமக்களில் பெரும்பான்மையினர் பொது ஜன ஐக்கிய முன்னணியையே ஆதரித்தனர் என்பதில் சந்தேகம் கொள்ள எதுவுமில்லை. இதனை பொது ஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெற்ற பிரதேசங்களின் இன ரீதியான சனத்தொகைப் பரம்பலை அடிப்படையாகக் ... முழுமையாக நிர்ணயிக்கும் சக்தியுள்ளவர்களாக உள்ள மாவட்டங்கள்/ தேர்தல் தொகுதிகள் என்பனவற்றில் பொது ஜன ஐக்கிய முன்னணி அமோக வெற்றி ஈட்டியமை தேர்தல் முடிவுகளில் தெளிவாக வெளிவந்துள்ளது. இந்தவகையில், தென்மாகாணம், மேல் மாகாணம், வடமேல் மாகாணம், சப்பிரகமுவ மாகாணம், வடமத்தியமாகாணங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணி தெளிவான வெற்றியை பெற, சிறுபான்மையர் வாக்குக்கள் தாக்கம் விளைவிக்க கூடிய மத்திய மாகாணத்திலும், ஊவா மாகாணத்திலும் ஐ தே க. வெற்றி பெற்றது.

ஆனால், சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் இப்பகுதியில் கிடைக்கப் பெற்ற வெற்றியானது தனியாக இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காணும் பொருட்டு வழங்கப்பட்ட ஆணையா என்பதிலேயே அரசியல் விமர்சகர்கள் கருத்து முரண்பாடு கொள்கின்றார்கள்.

## சிங்களவரின் முடிவிற்குக் காரணம் என்ன?

ஏனெனில் பொதுவாக இம்முறை ஆட்சி மாற்றத்திற்கு காரணமாக அமைந்ததெனப் பின் வரும் காரணங்களே விமர்சகர்களினால் முன்வைக்கப்படுகின்றன. அதன் பிரகாரம், 17 வருட ஐக்கிய தேசிய கட்சியின்ஆட்சியில்சலிப்படைந்து போயுள்ள மக்கள் ஆட்சி மாற்றம் ஒன்றைவிரும்பினார்கள் என்பதே முக்கியமானதாகும் இதையடுத்து, ஐ தே கட்சி ஆட்சியின் போது தென்னிலங்கையில் இடம் பெற்ற பல்லாயிரக்கணக்கான படுகொலைகள், மற்றும் அதிகார துஷ்பிரயோகம், லஞ்ச ஊழல்தொடர்பானகுற்றச்சாட்டுகள் என்பனவே முதன்மை பெற்றன. இதன் பின்பே இனப்பிரச்சினை விவகாரமும் யுத்தமும் தேர்தல் களத்தில் பேசப்பட்டது.

இந்நிலையில், தேர்தல் முடிவுகள் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதற்கு வழங்கப்பட்ட ஒட்டுமொத்தமான அங்கீகாரம் எனக் கொள்ள முடியுமா? என்ற கேள்வியிலும் சில அர்த்தங்கள் உள்ளதாகவே ... முயற்சிக்கும் தெற்கிலிருந்து பலமான ஆதரவு இல்லை.'' பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளரின் அவதானிப்பும் உள்ளது.

இவ்வாறான தொரு கேள்வியும் விமர்சனங்களும் முன்வைக்கப்படுவதற்கு பொது ஜன ஐக்கிய முன்னணியின் இனப்பிரச்சினை குறித்த நிலைப்பாடும் ஒரு முக்கியமான காரணமாகும்.

## இனப்பிரச்சினையும் பொ.ஐ.மு.வும்

ஏனெனில், இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காணப்படும். யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்படும்என்றெல்லாம்தேர்தல் பிரசாரத்தின்போது பொதுஜனஐக்கிய முன்னணி தெரிவித்ததே ஒழிய, இனப்பிரச்சினைக்கான அரசியற்தீர்வுஎன்னஎன்பதை ஒருபோதும் தெளிவாகவும், வெளிப்படையாகவும் அது முன்வைக்க வில்லை.

இந்நிலையில் பொது ஜன ஐக்கிய முன்னணியின் இனப்பிரச்சினைக்கான தீர்வானது தேர்தல் பரப்புரையின் போது தெளிவில்லாத ஊகங்களின் அடிப்படையிலானதாகவே இருந்தது. இவ் ஊகத்தின் படி வடக்கு - கிழக்கை பிரிப்பதும் இல்லை. இணைப்பதும் இல்லை என்ற ரீதியில் பழைய எல்லைகளை மாற்றி அமைக்கும் ஒரு திட்டமாகவே வெளிவந்தது, இவ் ஊகங்கள் சிங்கள மக்களையும், தமிழ் மக்களையும் ஒரு குழப்பமான நிலையிலேயே தொடர்ந்து வைத்திருந்தது,

இதன் காரணமாகவே, இம்முறை சிங்கள வாக்காளர்கள் இனப் பிரச்சினைக்கான அரசியற் தீர்விற்கே வாக்களித்தார்கள் என்று கூறுவது ஏற்றுக் கொள்ள கூடியதா? என்ற கேள்வி முன்வைக்கப்படுகின்றது. அவ்வாறு இல்லாமல், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்விற்கு வாக்களித்தார்கள் என்று கூறின் எந்தவகையில் / எந்த அளவினதான தீர்விற்கு வாக்களித்தார்கள் என்பது முக்கிய கேள்வியாக உள்ளது. இது இனப்பிரச்சினையை எந்தளவிற்கு தீர்க்க உதவும் என்பது அடுத்த கேள்வியாகும்.

## வடக்கு-கிழக்கு

... முன்வைக்காது விட்டாலும், வடக்கு - கிழக்கு இணைப்பு என்பதை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்பதை தெளிவாகப் பல தடவை அறிவித்துள்ளது இதனை சுதந்திரக் கட்சியின் தலைவியான சிறிமாவோ பண்டாரநாயக்காவும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் புதிய பிரதமரான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்காவும் தனித்தனியாக ஏற்கனவே கூறியும், அறிவித்தும் உள்ளனர்.

இந் நிலையில் பொது ஜன ஐக்கிய முன்னணி இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்விற்கு குறைந்த பட்சம் வடக்கு - கிழக்கு இணைப்பு வரை கூட அதன் எல்லைகள் விரியாது என்று துணிந்து கூறிவிட முடியும். இதற்கு உதாரணமாக தேர்தல் பிரசாரக்காலத்தின் போது வாசுதேவநாணயக்காரகூறியகருத்தொன்றை தமது பொதுக் கருத்தல்லவென பொதுஜன ஐக்கிய முன்னணி மறுத்ததோடு, அவரை நட்டாற்றில் கைவிடவும் தயாராக இருந்ததையும்சுட்டிக்காட்ட முடியும்.

அதாவது தொலைக் காட்சியில் எதிர்த்தரப்பான ஐக்கிய தேசியக் கட்சியுடன் பகிரங்க விவாதம் நடத்திய வாசுதேவ நாணயக்கர இனப்பிரச்சினை தீர்விற்கு தமிழர் தாயகமாக வடக்குப் - கிழக்குப் பிரதேசத்தை ஏற்றுக் கொள்வதோடு, அவர்களின் சுய நிர்ணய உரிமையும் அங்கீகரிக்கப்பட வேண்டும் எனக் கூறியிருந்தார்.

வாசுதேவாவின் இக் கூற்றானது, பௌத்த பேரினவாதிகளிடம் பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியது .வாசுதேவாவின் இந் நிலைப்பாடு பற்றி பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமையின் கருத்தென்னஎனமல்வத்த அஸ்கிரிய பீடங்கள் கேள்வி எழுப்பின. இந் நிலையில், வாசுதேவாவின் கருத்து அவரின் தனிப்பட்ட கருத்தெனவும், அதற்கும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் கருத்தல்ல எனவும் அஸ்கிரிய மல்வத்த பீடங்களைச் சேர்ந்தவர்களுக்கு சந்திரிகா குமாரணதுங்காவும், சேணல் அநுருத்த ரத்வத்தையும் விளக்கமளித்தனர்.

டிக்கைச் சபைக்கு அவர் எழுதிய கடிதம் ஒன்றில் ''தமிழ் அரசியல்வாதிகள் வடக்கு - கிழக்கு இணைப்பை வேண்டி நின்றாலும் எங்கள் கட்சி அதை ஏற்றுக் கொள்ளமாட்டாது. பொது ஜன ஐக்கிய முன்னணியின் உப தலைவர் சந்திரிகா குமாரணதுங்கா அவர்களும் இக் கருத்தை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்'' எனத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் இத் தேர்தலின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண சிங்கள மக்கள் அங்கீகாரம் வழங்கியிருந்தாலும், அவர்கள் வழங்கிய அங்கீகாரம் அதாவது பொ ஐ.முன்னணி பெற்றுக் கொண்டதாகக் கூறிக் கொள்ளும் அங்கீகாரம் இனப்பிரச்சினை தீர்விற்குப் போதுமானதாகஇல்லை என்றே கூறலாம்.

## வாசுதேவாவும் இனப்பிரச்சினையும்

ஆனால் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண சிங்கள மக்கள் அங்கீகாரம் வழங்கியுள்ளதாகக் கூறும் விமர்சகர்கள் சிலர் இரத்தினபுரி மாவட்டத்தில் வாசுதேவ நாணயக்காரவை சிங்கள மக்கள் அதிகப்படியான பெரும்பான்மையினால் தெரிவுசெய்துள்ளதையும் சிங்கள இனவாதக் கட்சிகள் யாவும் தேர்தலில் தோல்வி அடைந்ததையும் சுட்டிக்காட்டித் தமது நிலைப்பாட்டை நியாயப்படுத்த முற்படுகின்றனர்.

ஆனால் இவ்விவாதமும் தட்டிக்கழிக்கக் கூடியதாக இல்லாது விடினும்இதில்உள்ள முக்கியமான கேள்வி வாசுதேவ நாணயக்காரவிற்குக் கிடைத்த வெற்றியானது, அவரது தனிப்பட்ட கண்ணியத்திற்கும், அரசியல் நேர்மைக்கும் கிடைத்ததா? அல்லது வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பான அவரது நிலைப்பாட்டிற்குக்கிடைத்ததா?என்பதே முக்கியமான ஆகும். ஏனெனில் வாசுதேவ இரத்தினபுரி மாவட்டத்தில் தனிப்பட்ட ரீதியில் செல்வா...

... ரும் - போட்டியிட்ட நவசமசமாஜக் கட்சிக்கும் சிங்கள மக்கள் வாக்களித்திருக்க வேண்டும். அதனை அங்கீகரித்திருக்க வேண்டும் ஆனால் நவசமசமாஜக் கட்சி தேர்தலில் பெரும் தோல்வியைச் சந்தித்தது என்பதே உண்மையாகும்.

இந்நிலையில், தேர்தல் முடிவானது, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண்பதற்கான அங்கிகாரமாகக் கருதப்படலாமா என்பது ஒருபுறம், அவ்வாறு கருதப்படுமாகிலும் அதன் எல்லைகள் எந்தளவு தூரம் செல்லும் என்பதும் முக்கியமானதாக இருக்கும் அதேவேளை, பொ ஐ முன்னணி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு எடுக்கும் முயற்சிகள் எந்தளவு தூரம் வரையும் அனுமதிக்கப்படும் என்பது அடுத்த கேள்வியாக எழுகின்றது.

## ஜனாதிபதியும் இனப்பிரச்சினையும்

பொ. ஐ முன்னணி இன்று அரசாங்கத்தைக் கைப்பற்றியிருப்பினும், இன்னமும் அது அதிகாரங்கள் முழுமையாகப் பெற்ற ஒரு அரசாங்கமாக இல்லை என்றே கூறமுடியும், அதிலும் இனப்பிரச்சினை விவகாரத்தில் அதன் நிலைப்பாடு மிகவும் பலவீனமானதாகவே உள்ளது.

இதற்கு முப்படைகளின் தளபதியாகவும், பாதுகாப்பு அமைச்சராகவும் டி. பி. விஜேதுங்க இருப்பதோடு, நிறைவேற்று அதிகாரம் கொண்ட தளபதியாக அவரே செயற்படுவதும் முக்கிய காரணமாகும். இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரே தீர்வு என்றநிலைப்பாட்டைக் கொண்ட ஜனாதிபதி டி. பி விஜேதுங்கா, பொ. ஐ முன்னணியின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்ற நிலைப்பாட்டை எந்தளவில் ஏற்றுக்கொள்வார் என்பதில் சந்தேகங்கள் தோன்றுவதும் இயற்கையே.

ஏற்கனவே, புதிய பாராளுமன்றத்துக்...

... டக் கூடியதே ஆகும். இதற்கு இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காணப்படும் என்ற பொ ஐ முன்னணியின் கொள்கைப் பிரகடனத்தை அவர் ஏற்காதது ... காரணமாக இருக்கலாம்.

இந்நிலையில், ஜனாதிபதியாக டி. பி. விஜேதுங்கா பதவிவகிக்கும் வரை இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வின் முன்முயற்சியாகமேற்கொள்ளும் பொருளாதாரத் தடைநீக்கம் யுத்த நிறுத்தம் என்பவை எத்தகைய சாத்தியப்பாடு உடையவை என்பது தீர்மானிக்க முடியாத ஒன்றாகவே இருக்கும். ஆனால்தனது எதிர்காலத் தோல்வியை டி. பி. விஜேதுங்கா உறுதிப்படுத்துவாரேயானால் அவர் கூட இதற்கு ஒப்புதல் அளித்துவிடக் கூடும். இதற்கும் அப்பால், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொ. ஐ முன்னணி வெற்றி பெற்றால்இம்முட்டுக் கட்டை இலகுவில் தீர்ந்து விடலாம்.

இந்த வகையில் அரசியற்சூழ்நிலை உருவாகி பொருளாதாரத்தடை நீக்கம். யுத்த நிறுத்தம் என்பவற்றை அமுலப்படுத்தப்படுமானால். அதற்கு அப்பால், இனப்பிரச்சினை தீர்விற்கு முட்டுக்கட்டையாக எழப்போவதுபொது ஜன ஐக்கிய முன்னணியில் இருக்கும் இனவாதப் போக்குடையவர்கள் தான் ஒரு அரசியல் வினோதமாக இருக்கும். ஏனெனில், பொ. ஐ. முன்னணி இனப்பிரச்சினைக்கு தமிழ்மக்கள்ஏற்றுக்கொள்ளக் கூடியகுறைந்தபட்சதீர்வான வடக்கு-கிழக்கு இணைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதோடு, பௌத்தபீடங்களைப் ...

**ஜெயராஜ்**

பகைத்துக் கொள்ளவோ, அவர்கள் தயாராக இல்லை. இதுவே இனப்பிரச்சினைத் தீர்விற்கு பெரும் முட்டுக் கட்டையாக உருவாகக்கூடும் இந்நிலையில் சந்திரிகா குமாரணதுங்கா இதயசுத்தியுடன் தீர்வை விரும்பினும்கூட அது சாத்தியமாகுமா என்பது கேள்விக்குரியதே. இதன் வெளிப்பாடு ...

பிரதேசங்களின் இனரீதியான சனத்தொகைப் பரம்பலை அடிப்படையாகக் கொண்டே இலகுவில் புரிந்து (காள்ள முடியும்.

சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக்கொண்டதும், சிங்களமக்களே தேர்தலை

எனக் கொள்ள முடியுமா? என்ற கேள்வியிலும் சில அர்த்தங்கள் உள்ளதாகவே கொள்ளமுடியும், இதனை ஒப்புக்கொள்வது போன்றே ''இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு எடுக்கப்படும் எந்தவிதமான உண்மையான

பது அடுத்த கேள்வியாகும்.

## வடக்கு-கிழக்கு இணைப்பிற்கு எதிர்ப்பு

ஏனெனில், பொதுஜன ஐக்கிய முன்னணி இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வை

துங்காவும், சேணல் அநுருத்த ரத்வத்தையும் விளக்கமளித்தனர்.

இதனை சிறிமாவோ பண்டார நாயக்காவும் தெளிவாக உறுதிப்படுத்தியுள்ளார். வடக்கு - கிழக்கு இணைப்பு விவகாரம் தொடர்பாக, பௌத்த நடவ

இரத்தினபுரி மாவட்டத்தில் தனிப்பட்ட ரீதியில் செல்வாக்கைக் கொண்டவர் என்பது ஒருபுறம் இருக்க வாசுதேவாவின் கொள்கைக்குச் சிங்கள மக்கள் அங்கீகரிப்பதாக இருப்பின் அதே கொள்கையுடன் வாசுதேவா கட்சியைவிட்டு வெளியேறிய பின்ன

ஏற்கனவே, புதிய பாராளுமன்றக்கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து பொ. ஐ. முன்னணியின் அரசின் கொள்கைப் பிரகடனத்தை வாசிக்க டி.பி. விஜே துங்கா மறுத்தமை இங்கு சுட்டிக்காட்

குரியதே. இதன் வெளிப்பாடு சிங்கள மக்கள் தேர்தல் மூலம் இனப்பிரச்சினைத் தீர்விற்கு அங்கீகாரம் அளித்தார்கள் என்பதை பொதுஜன ஐக்கிய முன்னணியினரே நிராகரித்துவிடினும் ஆச்சரியப்படுவதும் இருக்காது

## உயிரோடு

சள் தென்னிலங்கையில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி அன்றைய ஆட்சியாளர்களையே அரச கட்டிலிலிருந்து தூக்கி எறிந்து விடுமளவிற்சப் போயிற்று மண்டைதீவில் மீட்ட எலும்புக்கூடுகளும் நிச்சயம் இம் மண்ணின் விடுதலைக்கு உரமூட்டும் என்பதைக் காலத்தின் அசைவு காட்டியே நிற்கும்.

## மாண்டு போயினர்

1990 ஆகஸ்ட் மாதம் தீவக மண்ணில் இடம்பெற்ற இராணுவ ஆக்கிரமிப்புக்குக் காரணமாக இருந்த அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ண, தமிழன்னை விட்ட கண்ணீருக்கு இரையாகிப் போனான், இராணுவ அணிக்கு முன்னின்று, அப்பாவிப் பொது மக்களைச் சுட்டுக் கொன்று உடைமைகளைச் சூறையாடிய இராணுவத் தளபதி கொப்பேகடுவவும் விஜயவிமலரட்னாவும் அவனது சகாக்களும் அதே தீவகமண்ணின் அராலித்துறையில் கூண்டோடு இயமலோகம் போனதும் நான்கு ஆண்டுக்குள் நடந்து முடிந்த நிகழ்வுகள்

## 1994 ஆகஸ்ட் 25

கடந்த நான்கு ஆண்டுகளில் நடந்து முடிந்த சம்பவங்கள் அநேகமாயினும் நாலாவது ஆண்டின் நிறைவு நாளில் ஸ்ரீலங்காவின் புதிய ஆட்சியாளர்களின் புதிய பாராளுமன்றம் கூடும் நிகழ்வானது குறிப்பிடத்தக்கது எவ்வாறாயினும் மீண்டும் சொந்த மண்ணில் சுதந்திரமாக வாழ்வோம் என்ற உறுதியோடு தீவக மக்கள்.

## சந்திரிகா

### காமினியின் சங்கடம்

இந்நிலையில், காமினியும் டி. பி. விஜேதுங்காவும் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தானவுடன் தொடர்பு கொண்டு ரணில் விக்கிரமசிங்க நடந்துகொண்ட விதம் குறித்து முறையிட்டனர். அப்போது ஜே. ஆர். ஜயவர்த்தன ''நான் தற்போதைய அரசியல் நிலை தொடர்பாக எக்கருத்தையும் தெரிவிக்க மாட்டேன், ஏனெனில் துடிப்பான கட்சி அரசியல் நடவடிக்கையில் இருந்து ஓய்வு பெற்று நீண்ட நாட்களாகின்றன. எனவே நடப்பதை மட்டும் பார்த்துக் கொள்வேனே தவிர எந்த விடயத்திலும் தலையிடுவதை நான் விரும்பவில்லை'' என தொலைபேசியில் பதிலளித்தார்.

இதனைதொடர்ந்துகாமினி திசாநாயக்கா, தான் நேரடியாக ஜே. ஆர் ஜெயவர்த்தனாவை சந்திக்க விரும்புவதாக தெரிவித்தார். அதற்கு ஜே. ஆர். '' தற்போதைய விடயங்கள் எல்லாம் நடந்து ஓர் முடிவுக்கு வந்த பின்னர் என்னை வந்து சந்திப்பதே ஓர் நல்ல நிகழ்வாக தான் கருதுவதாகவும் அதன்படியே செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார்

இதேவேளை, பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் அதன் பிரதி தலைவி சந்திரிகா குமாரணதுங்கா தலைமையிலான தூதுக்குழுவொன்று ஜனாதிபதி மாளிகைக்கு வருவதற்கு ஜனாதிபதியிடம் முன்னனுமதியை கேட்டனர் அதற்கு ஜனாதிபதி அனுமதி வழங்கினார் இதனைத்தொடர்ந்துதிருமதி சந்திரிகா குமாரணதுங்கா, சுதந்திரக்கட்சி பொது செயலாளர் தர்மசிறி சேனாநாயக்கா, பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் மற்றும் கட்சி சட்டத்தரணி சகிதம் ஜனாதிபதி மாளிகைக்கு வந்தனர் அவர்கள் தமக்கு கிடைத்த ஆசனங்கள் தொடர்பாகவும் தமக்குஒத்துழைப்பு நல்கமுன்வந்த கட்சிகளின் உறுதிப்பாடு அடங்கிய ஆவணங்களையும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்து பாராளுமன்றத்தின் ஆட்சியை அமைக்கும் அதிகாரம் தம் வசமிருப்பதை நிரூபித்தார்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா, சந்திரிகா குமாரணதுங்காவை பிரதமராக பதவியேற்க அழைக்க வேண்டிய கட்டாய நிர்ப்பந்தத்திற்குள்ளானார். ரணிலின் காலைவார நினைத்த காமினியின் திட்டம்தவிடு பொடியாளது.

இதனைத் தொடர்ந்து புதிய பிரதமராக ஆட்சியமைக்குமாறு சந்திரிகா குமாரணதுங்கா அழைக்கப்பட்டார்.

மொத்தஆத்திரமும் இதுவரைரணிலைஆதரித்தசிறிசேனகூரே மீது திரும்பியது. தேசியப் பட்டியலில் பாராளுமன்றம் புக இருந்த, சிறிசேனகூரே தள்ளி வைக்கப்பட்டு, அவரது இடம் பறிக்கப்பட்டது. ரணிலின் மீது நேரடியாக மோத முடியாத இடத்தில், சந்திரிகா குமாரணதுங்காவின் பதவியேற்போடும் குரேயின் பழிவாங்கலோடும் ஒருகட்ட அரசியல் ஆட்டம் முடிவடைந்தது.

அடுத்த கட்டம், காமினிக்கும், ரணிலுக்கும் இடையிலான எதிர்க்கட்சித் தலைவருக்கான போட்டி. இப்போட்டியும் ஐ. தே.கவை இன்னும் இரண்டுபடுத்தவே உதவும்என்பது வெளிப்படை.

# அமைச்சரவையில் பதவி வகிக்கும் அமைச்சர்கள் சிலர் பற்றியகுறிப்புக்கள்

திருமதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரணதுங்க அமைத்துள்ள அமைச்சரவை பலதரப்பினராலும் வெகுவாகப் பாராட்டப்பட்டுள்ளது பல துறைகளையும் கல்விமான்களையும், இணைத்து அனைத்து மாவட்டங்களையும் பிரதிபலிக்கும் வகையில் மிகவும் குறைந்த எண்ணிக்கையுடன் இந்த அமைச்சரவை அமைககப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் 1914-ல் பிறந்த பெர்னாட் சொய்சா முதல் 1957-ல் பிறந்த மங்கள சமரவீரா வரையிலானவர்கள் இதில் இடம்பெற்றிருக்கின்றனர். இந்த அமைச்சரவை நியமனம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்க கூறுகையில் இலங்கையில் அண்மைக் காலங்களில் அமைக்கப்பட்ட அமைச்சரவைகளில் பூரண திருப்தி தரக்கூடியது என்றும், உண்மையிலேயே இது குறித்து திருப்தி அடைவதாகவும், புகழாரம் சூட்டுவதாகவும், தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதில் இடம் பெற்றுள்ள அமைச்சர்கள் சிலரது விபரங்கள் வருமாறு.

### மகிந்த ராஜபக்ஷ

(தொழில் மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சர்)

18 நவம்பர் 1945-ல் பிறந்த இவர் பெலியத்த தொகுதியிலிருந்து 1970-ல் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

காலி றிச்மன்ட் கல்லூரியின் பழைய மாணவரான இவர், நாலந்த மற்றும் தேர்ஸ்டன் கல்லூரிகளிலும் பயின்றிருப்பதுடன் சட்டத்தரணியாக பட்டம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிராகுவே தொழிற் சங்க கல்லூரியில் தொழிற் சங்கத் துறையில் பட்டம் பெற்றவர்.

### லக்ஸ்மன் கதிர்காமர்

(வெளிவிவகாரத்துறை அமைச்சர்)

12 ஏப்ரல் 1936-ல் பிறந்த இவர் கண்டி திரித்துவக் கல்லூரியில் ஆரம்பக் கல்வி கற்ற இவர் இலங்கை பல்கலைக் கழகத்திலும் பயின்று பட்டம் பெற்ற பினனர் சட்டக் கல்லூரியில் இணைந்து 1953-ல் பட்டம் பெற்றார். உயர் நீதிமன்ற வழக்கொன்றை இவர் சர்வதேச ரீதியில் நன்கு அறியப்பட்ட சடடத்துறை விற்பன்னர்களில் ஒருவர் என்பதும், ஐக்கிய இராட்சியத்தில் இயங்கிய பிரிவு கவுன்சில் நீதிமன்றத்தில் கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### மொகமட் ஹுசைன் முகம்மது அஷ்ரப்

(கப்பற்துறை, துறைமுகங்கள் மற்றும் புனர்வாழ்வுத்துறை அமைச்சர்)

23 அக்டோபர் 1948-ல் பிறந்த இவர் கல்முனையில் தமது ஆரம்பக் கல்வியை தொடர்ந்த பின்னர் 1970-ல் சட்டக் கலலூரியில்சேர்ந்தார் 1975-ல் சட்டமா அதிபர் திணைக்களத்தில் சேர்ந்த இவர் அதிலிருந்து விலகி சட்டத்தரணியாக கடமையாற்றியுள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற பெயரில் எண்பதுகளின் இறுதிப் பகுதியில் நிறுவிய இவர் அக் கட்சியின் தலைவராகவும் தொடர்ந்து இருந்து வருகின்றார்.

### அனுருத்த ரத்வத்த

(நீர்ப்பாசனம், எரிபொருள் மின்சக்தி, பிரதி பாதுகாப்பு அமைச்சர்)

1938 ஆம் ஆண்டு ஜூலை மாதம 13-ம் திகதி பிறந்த இவர் கண்டி திரித்துவக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக் கற்றார். கண்டி மாநகர சபையிலும் அங்கத்தவராக இருந்தார். லெப்டினன்ட் கேர்ணலான இவர் விளையாட்டுத் துறையில் ஈடுபாடு மிக்கவர்.

### மங்கள புன்சிரி சமரவீர

(தபால் மற்றும் தொலைத் தொடர்பு அமைச்சர்)

21 ஏப்ரல் 1957-ல் பிறந்த இவர் மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்தவர். சுதந்திரக் கட்சியின் லண்டன் கிளையில் கடமையாற்றியவர். லண்டன் சென், மொறிரியஸ் ஓவியக் கல்லூரியில் பட்டம் பெற்றவர் கொழும்பு றோயல் கல்லூரியில் பழையமாணவரான இவர், ஆடைத் தொழில் நுட்பம் மற்றும் டிசைன் வகைகள் செய்வதில் பட்டம் பெற்றவர். களனிய பல்கலைக் கழகத்தின் அதிதி விரிவுரையாளர்.

### சிறிமாணிஅத்துலத்முதலி

(போக்குவரத்து நெடுஞ்சாலைகள் சுற்றாடல், மகளிர் விவகார அமைச்சர்)

1946-ம் ஆண்டு அக்டோபர் 27-ந் திகதி பிறந்த இவர் கொழும்பு மகளிர் கல்லூரி மாணவி. கிரான்ல்ட் அட்வடைசிங் நிறுவனத்தில் தொழில் புரிந்தவர், நோட்டன் கூட்டுத்தாபனத்திலும் ஜெனிவாவிலும் கடமையாற்றியவர் ஜெனிவாவில் கடமையாற்றியபோது, இவாது கணவர் முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலியை சந்தித்து மணந்து கொண்டார்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# அகதிகளை அழைத்துவரும் முயற்சி ஐ. நா. ஸ்தாபனத்தால் நிறுத்தம்

(கொழும்பு)

தமிழ் நாட்டிலிருந்து இலங்கை அகதிகளை, மீண்டும் இலங்கைக்கு கொண்டுவரும் முயற்சிகளை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் நிறுத்தியுள்ளது.

இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட அகதிகள் பாதுகாப்புப் படையினால் தாக்குதல்களுக்கு இலக்காவதால். தொடர்ந்தும் அவர்களை அழைத்துவர முடியாதுள்ளது என்றும் இது குறித்து இந்திய அரசுக்கும் தமிழ் நாடு அரசுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து திரும்பிய அகதிகளில் இருவர் குருநகர்ப் பகுதியில் இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதையும், இருவர் காணாமல் போயுள்ளதையும், வேறுபலர் காயமடைந்துள்ளதையும், ஐ நா. உயர்ஸ்தானிகராலயம் சுட்டிக்காட்டியுள்ளது.

தாயகம் திரும்பும் அகதிகளுக்கான பூரண பாதுகாப்பை இலங்கை அரசு வழங்கும் வரை அகதிகளை திருப்பியனுப்பும் முயற்களில் ஈடுபடப் போவதில்லை எனவும் அது தெரிவித்துள்ளது

## நியமனம்

பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவராக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நியமனப் பிரதிநிதி அஸ்கிம் தெரிவானார். இவர் தம்முடன்போட்டியிட்டஐ தே.க.வைச் சேர்ந்த ஏ எச்.எம். அஸ்வரை 27 அதிகப் படியான வாக்குகளால் வென்றார்-

# 700 அகதிகளை அனுப்ப ஜெயலலிதா விடாப்பிடி

(யாழ்ப்பாணம்)

தமிழ் நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் சுமார் 700 பேரை இலங்கைக்கு திருப்பியனுப்ப தமிழ் நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

இவர்கள் அடுத்த மாதம் முதலாம் கிழமையளவில்இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்கு திருப்பியனுப்பப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

இதுவரை காலமும் இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பியனுப்பிய இந்திய அரசிற்கு இலங்கையின் வட-கிழக்கில் சுமுகமான நிலை இன்னமும் இல்லை இதனால் இந்தியாவில் இருந்து திரும்பிய பல அகதிகள் சிறிலங்காப் படையினரின் தாக்குதல்களில் சிக்கி உயிரிழந்து வருவதைத் தொடர்ந்து அகதிகளுக்கான ஐ நா வின் செயலகம் இந்திய அரசிற்கு கொடுத்த நெருக்குதல்களை அடுத்து அகதிகளை இந்தியா திருப்பியனுப்புவதை நிறுத்தி வைத்திருந்தது தெரிந்ததே.

ஆனால் மீண்டும் அகதிகளை இந்திய அரசு திருப்பியனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கு தமிழ் நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (பா, தி)

# யாழ். பல்கலை ஊழியர் தொடர்ந்துவேலைநிறுத்தம்

தொழில் நுட்ப வியலாளர் நியமனம் தொடர்பாக தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக யாழ்ப்பாண பல்கலைக் கழக ஊழியர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். நேற்று ஆரம்பமாகியுள்ள இப் போராட்டம்தொடர்ந்து நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

நேற்று பிற்பகல்2 30 மணியளவில் நடைபெறவிருந்த மேற்படி நியமனம் குறித்த நேர்முகப் பரீட்சைக்கு ஆட்சேபனை தெரிவித்து சத்தியாக்கிரக போராட்டமும் நடைபெற்றது இன்று முதல் போராட்டம் முழு அளவில் விஸ்தரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு ஊழியர் தவிர்ந்த ஏனைய ஊழியர்கள் இப் போராட்டத்தில் கலந்து கொள்வர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஆசிரியர் நேர்முகத் தேர்வு

வன்னி, முல்லை, மன்னார் மாவட்ட தமிழீழக் கல்வி அபிவிருத்திக்சழக விஞ்ஞான கணித, ஆங்கில, சங்கீத, நடன ஆசிரியர்கள் தெரிவிற்கான நேர்முகத்தேர்வு 28-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு ப 9 மணிக்கு தமிழீழக் கல்விக் கழக அறிவோர் கூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. விண்ணப்பங்கள் இதுவரை அனுப்பாதவர்கள் சகல சான்றிதழ்களுடனும் நேரடியாகச் சமுகமளிக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய

தொடர்ந்து இடம்பெற்ற இரகசியவாக்கெடுப்பின் மூலம் பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த திரு. கே. பி. ரட்ணாயக்கா 34 அதிகப்படியான வாக்குகளால் சபா நாயகராக தெரிவானார்.

## பொது அறிவு போட்டி


## ★★★★★ முதலாவது ★★★★★ பிறந்ததின வாழ்த்து

(26 08-94)

செல்வி பா. பவித்திரா

இல. 359/3, கோபால் லேன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாலச்சந்திரன் அன்னலட்சுமி தம்பதிகளின் செல்வப் புதல்வி பவித்திரா தனது முதலாவது பிறந்த தினத்தை 26-08-94 இல் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

பவிக்குட்டியை அப்பா, அம்மா, அம்மப்பா, அப்பம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பா, பெரியம்மாமார், சித்தப்பாமார், அன்ரிமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அவரை ஸ்ரீ காமாட்சி அம்பாள் அருள் பெற்று நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
சவுதியில் வசிக்கும்
மாமா

இல. 359/3,
கோபால் லேன்,
யாழ்ப்பாணம்.

(சி-10180)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-

## மகாபொல புலமைப் பரிசில்

## 6-வது கொடுப்பனவு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கான மகாபொல புலமைப் பரிசில் 6-வது கொடுப்பனவை பல்கலைக்கழக வளவினுள் அமைந்துள்ள மக்கள் வங்கி கிளையில் 26 - 08-94 தொடக்கம் வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான நேர அட்டவணையினை பல்கலைக்கழக அறிவித்தல் பலகைகளில் பார்வையிடலாம்.

(சி 10178) பதிவாளர்.


# மறியலில் ஈடுபட்டால் ஒழுக்காற்று நடவடிக்கை

### பல்கலை. துணைவேந்தர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்விநியோகம், மின்விநியோகம், சுகாதாரசேவை, பாதுகாப்பு சேவை என்பன அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக் கழக துணைவேந்தரின் அறிவித்தலொன்று கூறுகிறது. யாழ். பல்கலைக் கழகத்தில் மேற்படி பிரிவுகளில் கடமைபுரியும் ஊழியர்கள் கடமைக்கு சமுகம் தரும்படியும் தவறின் வேலையிலிருந்து நீங்கியவர்களாககருதப்படுவார்கள் எனவும் அவ் அறிவிப்பு கூறுகிறது.

யாழ் பல்கலைக் கழக வளாகத்திலும் மறியலில் ஈடுபட்டு அதன் சுமுகமான இயக்கத்திற்கு தடையாக இருப்போர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவ் அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கரும்புலி

றார்கள். எமது போராட்டத்திற்கு பெரிய வெற்றிகளை தந்துவிட்டு தம்மையே உயிராயுதமாக்கி உரு அழிந்து போன கரும்புலிகளின் அர்ப்பணிப்புக்கள் சொல்லிலடக்க முடியாதவை.

இந்த வரலாற்றில் 16-8-1994 அன்று காங்கேசன்துறை துறைமுகத்தில் நடைபெற்ற கரும்புலித் தாக்குதல் பெரிய வெற்றியை ஈட்டித்தந்தது கடற்புலிகள் விசேட படையணி மேற்கொண்ட இவ் வெற்றிகரமான தாக்குதலில் சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான கட்டளையிடும் தலைமைத் தாய்க்கப்பலும் அதிவேக பீரங்கிப் படகான டோறாவும் மூழ்கடிக்கப்பட்டன. பெரும் எண்ணிக்கையான கடற்படையினர் கொல்லப்பட்டனர். சிறிலங்காவிற்கு பாரிய இழப்பினை ஏற்படுத்திய இந்தத் தாக்குதலில் கடற்கரும்புலியான கப்டன் அங்கயற்கண்ணி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இவர் கடற் கரும் புலிகளில் வீரச்சாவடைந்த முதற் பெண் போராளியுமாவார்.

எமது போராட்டத்தின் வளர்ச்சியில் எமது பெண் போராளிகளின் சாதனைகள் ஒப்பற்றவை உலகே வியக்கும் வண்ணம் எமது பெண் போராளிகள் பல வீரகாவியங்களைப் படைத்துக்கொண்டிருக்கிறார்கள். எமது மகளிர் படையணியினரின் ஒரு சகாப்த வளர்ச்சியானது புதிய பரிமாணங்களில் முன்னேற்றங்கண்டு வருகின்றது. இந்த வகையில் கடற் கரும் புலியான கப்டன் அங்கயற்கண்ணியின் வீரசாதனை எமது போராட்டப்பாதையில் ஒரு புதிய திருப்பு முனையைக் குறித்து நிற்கிறது. காலம் காலமாக அடிமை இருளில் கட்டுண்டு கிடந்து மெல்ல மெல்ல முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கும் தமிழீழப் பெண்ணினத்திற்கு இந்த வீரசாதனை நம்பிக்கையூட்டும் நிகழ்வாக அமைகிறது. எமது போராட்ட வரலாற்றில் இந்தக் கடற் கரும்புலியின் அற்புதமான அர்ப்பணிப்பு ஒரு மைல் கல்லாக விளங்கும் என்பது திண்ணம்.

இவ் வீரசாதனையை நிகழ்த்தி வீரச்சாவடைந்த கடற்

# விளையாட்டுவிழா

(தொல்புரம்)

கோப்பாய் பிரதேசஊரெழு வளர்பிறை சனசமூக நிலையமும், தேசிய சர்வோதயமும் இணைந்து நடாத்தும் பாலர் பாடசாலைவருடாந்த விளையாட்டு விழா வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது- இன்று பிற்பகல் 1.00 மணியளவில் சனசமூக நிலைய விளையாட்டரங்கில் நிலையத் தலைவர் திரு ப. இராசேந்திரம் தலைமையில் நடைபெறும்- (41)

## தனது

தார் என்று அவரது உதவியாளர் கூறியுள்ளதாக பி. பி. ஸி தெரிவித்தது.

மேலும் டி. பி. விஜேதுங்காவின் இத்தகைய செயலானது அவர் புதிய கட்சியின் முகத்தில் கரிபூசினார் என்பதைவிட தன் முகத்தில் தானே கரியைப் பூசிக்கொண்டார் என்றே கருத வேண்டியுள்ளது என அது மேலும் தெரிவித்தது.

## விஷமிகள்

இப் பாடசாலை இயங்க இடவசதிகள் இல்லாததினால் செம்பியன்பற்று பிலிப்நேரியார் ஆலயத்திற்கருகில் 1992 ஆம் ஆண்டு முதல் யாழ். செயலக புனர்வாழ்வு புனரமைப்பு, கல்வித் திணைக்களம் போரூட் நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இயங்கிவந்தது இப்பாடசாலை எரிந்து நாசமாகியதால் இப்பாடசாலை மாணவர்கள் கல்வி கற்க முடியாத ஒரு அவலநிலை ஏற்பட்டுள்ளது.

மருதங்கேணி கோட்டத்தில் க. பொ. த. சாதாரணப் பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களின் கல்வியில் விஷமிகள் மண்போட்டுவிட்டதாக அங்கு கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர் கவலையடைந்துள்ளனர்.

இப்பாடசாலை தீவைக்கப்பட முன்னர் பாடசாலை இயங்கிக்கொண்டிருக்கும் போதும் இரவு நேரங்களில் மாணவர்களின் ஆசனங்களில் மலசலம் கழித்து வந்ததாகவும் அறியப்படுகிறது. எதிர்வரும் 5 ஆம் திகதி பாடசாலை ஆரம்பமாகும் போது இப்பாடசாலை மாணவர்களின் நிலை என்ன என பெற்றோர் ஏங்குகின்றனர்.

(யோ) (36)


## தியாகி திலீபன் 7 ஆம் ஆண்டு நினைவு தின

## கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகள்

தமிழீழ மாணவர்களே!
விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு
மகளிர் பிரிவினர்
அளிக்கும் இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
உங்கள் படைப்பாற்றலைக் காட்டிப் பெறுமதிமிக்க
பரிசுகளையும் சான்றிதழ்களையும் பெற்று மகிழுங்கள்

போட்டி விதிமுறைகள்:-

போட்டி முடிவுத் திகதி: 10-09-1994

விடுதலைப் புலிகள்
(சி-10169) மாணவர் அமைப்பு (மகளிர்)


மண்கும்பான் பெற்றெடுத்த தமிழீழத்தின்

# அறிவித்தல்

நல்லூரில் நடைபெற்றுவரும் கைத்தொழில் சந்தையில் வடதமிழீழ கைத்தொழில் நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளையும் புதிய கண்டு பிடிப்புக்களையும் காட்சிப் பொருட்களாக வைத்து அவற்றிற்கான சந்தை வாய்ப்புக்களை உறுதிப்படுத்து முகமாக, தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. இதுவரை தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தில் பதிவு செய்து கொண்ட அனைத்து கைத்தொழில் நிறுவனங்களும் தத்தமது உற்பத்திப் பொருட்கள், கண்டுபிடிப்புக்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு மாதிரியை நல்லூரில் இயங்கும் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தின் அலுவலகத்தில் 29-08-94 க்குள் தவறாது கையளித்து ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனர்,

230, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(சி-10182)



யாழ். ஸ்ரீதரில்

அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும்,
தினசரி காலை 10-30 மணிக்கு

'' மண்ணுக்காக ''

இன்று முதல்

தினசரி 4.00, 6.00 மணிக்கு

## CIRCUS

ஒரு சைக்கிளில் 20 பேர் பயணம்!
பந்தின்மேல் கரடியின் நடனம்!
உருளையின் மேல் யானையின் ஆட்டம்!
ஒட்டகத்தின் சாகசம்!
100 அடி உயரத்தில் இருந்து காருடன் பாயும்பெண்!
இவைகளைக்காண இன்றே வாருங்கள் ஸ்ரீதருக்கு!

சனி, ஞாயிறு தினங்களில் பி ப. 2.00 மணிக்கு மட்டும்

**யூன் - 94 ஒளிவீச்சு** காண்பிக்கப்படும்.

பேராசிரியர் துரைராசா அவர்களைக் கௌரவித்து தமிழீழ தேசியத் தலைவர் விருதுவழங்கும் வைபவமும் பேராசிரியரின் இறுதி ஊர்வலமும் ஒளிவீச்சில் இடம் பெறுகின்றது.

(சி-10173)


நாயகராக தெரிவானார். இவருக்கு 127 வாக்குகளும், அனுரா பண்டார நாயக்காவிற்கு 93வாக்குகளும் கிடைத்தன. நான்கு உறுப்பினர்கள் சமுகமளிக்கவில்லை. ஒரு வாக்கு நிராகரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

திரு. கே. பி ரட்ணாயக்கா பாராளுமன்ற செயலாளர் நாயகம் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இதனைத் தொடர்ந்து திரு. அனில் முனசிங்க 33பெரும் பான்மை வாக்குகளால் பிரதிசபா நாயகராகத் தெரிவு செய்யப்பட்டார். இப் பதவிக்கு போட்டியிட்ட இவருக்கு 127 வாக்குகளும் இவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஆரியரக்கவவிற்கு 94 வாக்குகளும் கிடைத்தன.

1923பெப்ரவரி23ஆம்திகதி பிறந்த புதியசபாநாயகர் கே. பி ரட்ணாயக்கா பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியில் கல்வி பயின்றவர். அனுராதபுரம், தேர்தல் தொகுதியிலிருந்து 1962, 1965, 1970 தேர்தல்களில் தெரிவு செய்யபட்டவர். 70ஆம் ஆண்டு ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் பாராளுமன்ற அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சராகவும் கடமையாற்றியவர். பின்னர் போக்குவரத்து அமைச்சராகவும் கடமையாற்றினார்.

இம் முறை தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

## ஐ. தே. க

மேலும் தெரிவித்தார்.

தற்போது ஐ' தே. கவிற்கு உள்ளேயும், கட்சிக்கு வெளியேயும் உள்ள அபாயங்களை தான் நன்கு உணர்ந்துள்ளதாகவும் எனவே இதற்கு தகுந்த முறையில் நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் இதற்கு தனக்கு சகலரது ஒத்துழைப்பும் தேவை எனவும் அவர் தெரிவித்தார்.

## போட்டி

யாழ். நல்லூர் கல்விக் கோட்ட கல்வி அபிவிருத்திக் கழக ஆசிரியர்களுக்கான போட்டிப் பொது அறிவுத் தேர்வு முன்னர் அறிவித்தபடி நாளை சனிக்கிழமை நடைபெற மாட்டாதெனவும் எதிர்வரும் 10-ம் திகதி சனிக்கிழமை மு-ப. 9-00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியின் மண்டபத்தில் நடைபெறுமெனவும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

முதற்பெண் கடற்கரும்புலி கப்டன் 'அங்கயற்கண்ணி' அவர்களின் வீரவணக்க நிகழ்வை முன்னிட்டு யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தினரால் நாளை சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற இருந்த பொது அறிவு,பேச்சு, அதிர்ஷ்ட லாபச்சீட்டு ஆகியவற்றுக்கான பரிசளிப்பு விழா வரும் இரண்டாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## அக்காவை

பற்றிப்பிடித்து: அனுரா பண்டாரநாயக்காவை நோக்கி ஏதோ பேசியபடி இருந்தார். இதனை பொருட்படுத்தாது அனுராபண்டாரநாயக்கா இடத்தைவிட்டு அகன்றார்.

## ஊழல்

ஆராய விசேட ஆணைக்குழு ஒன்றை நியமிப்பது தொடர்பான பூர்வாங்க வேலைகள் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டது.

இவ் விசாரணைக் குழுவின் முன்னால் பல ஐ. தே. க. அமைச்சர்களும் உறுப்பினர்களும் செல்ல வேண்டிவரும் என தெரிவிக்கப்படுகிறது.

கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணிக்கு எமது வீரஅஞ்சலியை செலுத்துகின்றவேளையில் எமது விடுதலைப் போரை முன்னெடுக்கும் பணியில் அனைத்து தமிழீழப் பெண்களும் பங்களிக்க வேண்டும்.

## பெண்ணை

பெண்ணையே கொள்ளையர் தாக்கிவிட்டு நகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இப் பெண் இரண்டு கண்களும் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (பா),(தி)

## புலிகளின்குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994 08 26

### வெள்ளி இரவு

08. 01- முதற்பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் எழுச்சி நாளை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி
08. 10- கடற்கரும்புலிகள் மேஜர் வரதன்,கப்டன் மதன் ஆகியோர் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''கிளாலிக் கடலில் வீரச்சாதனை''
08. 30- செய்திகள்
08. 40- அரசியல்அரங்கம் '' அருகிலிருப்பதால் அடிபணிய வேண்டுமா?''
08. 50- வாத்திய கானங்கள்

### 1994.08.27

### சனி காலை

07. 02- மாவீரவணக்கம்
07. 15- நீங்கள் கேட்டவை
07. 30- செய்திகள்
07. 35- பத்திரிகைச் செய்திகள்
07. 40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.


முதற் பெண் கடற்கரும்புலிக்கு

## எமது அஞ்சலிகள்

16 - 08 - 94



மண்கும்பானைப் பிறப்பிடமாகக் கொண்ட

**கப்டன் அங்கயற்கண்ணி**

**(துரைசிங்கம் புஸ்பகலா)**

தமிழீழத்தின்விடிவிற்காக தன் இன்உயிரைஈந்தார் இவரின் தீரத்துக்கு தலை சாய்த்து வணங்குகிறோம்.

தேசியத் தலைவர் வழியில் வந்து கட்டளைக் கப்பலைத் தகர்த்த காவியத்தலைவி நீ

கிராம அபிவிருத்திச்சங்கம்
மண்கும்பான்

(9210)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மமேந்திரா வீதி 31ம் ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.